
பக்கங்கள் 30

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 21 ஞாயிற்றுக்கிழமை 25.05.2025 | அதிர்வு 294

## யானை தாக்கி சிறுவன் சாவு!

### திருமலையில் துயரம்



(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டம், கோமரங்கடவெல – திக்கட்டுவ பகுதியில் காட்டு 03▸





### நாட்டைப் படுகுழியில் தள்ளிய

# ராஜபக்ஷக்களை மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்

### நாமலின் கருத்துக்கு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பதிலடி

"பாரிய கொலைக் குற்றங்களை இழைத்து - ஊழல், மோசடிகளில் ஈடுபட்டு நாட்டைப் படுகுழியில் தள்ளிய ராஜபக்ஷக்களைமக்கள்எவரும்ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று ராஜபக்ஷக்கள் கனவு காணக்கூடாது."

- இவ்வாறு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். 04▸

# அடுத்த ஆண்டு அநுர அரசு வீட்டுக்கு விரட்டியடிக்கப்படும்

### இப்படி அடித்துக் கூறுகின்றது சஜித் அணி

"அநுர அரசுக்கு நாட்டைக் கொண்டு செல்ல முடியாது என அரச அதிகாரிகளும், நிறுவனத் தலைவர்களும், துறைசார் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அடுத்த ஆண்டு இந்த நாளில் நாட்டு மக்களால் அநுர அணியினர் ஆட்சியில் இருந்து துரத்தியடிக்கப்படுவார்கள்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் 04▸






மே மாதம் ஆறாம் திகதி நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் சமூக ஊடகங்கள் கணிசமான பங்கு வகித்திருந்தன. ஆழமான தாக்கத்தைச் செலுத்தி இருந்தன.

தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை சமூக ஊடகங்களில் வெளியான அரசியல் நிலைவரம் பற்றிய செய்திகள் தேர்தல் முடிவுகளில் பெரும் காத்திரமான பங்கையாற்றி இருந்தன என்பது கண்கூடு.

அதிலும் வடக்கில் தமிழ் மக்களின் 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளைக் கபளீகரம் செய்ய அரசு முயற்சிக்கின்றது, அதற்கான வர்த்தமானி அறிவித்தலை அரசு வெளியிட்டுள்ளது என்று தெரிவித்து, தேர்தல் வாக்களிப்பு நெருங்கும் கடைசி நேரத்தில் வெளியான அதிர்வுச் செய்தி இந்தத் தேர்தலில் கனகாத்திரமான பங்கை 03▸



# பஸ் – லொறி மோதி கோர விபத்து! ஒருவர் உயிரிழப்பு; 12 பேர் காயம்!!

கொழும்பு – வெல்லவாய வீதியில் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்ற கோர விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காயமடைந்துள்ளனர் என்று தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் தங்காலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் இருந்து காலி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், முன்னால் சென்ற லொறியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸில் பயணித்த சாரதி உட்பட 13 பேர் காயமடைந்து தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், படுகாயமடைந்த பயணி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் சடலம் தங்காலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் தங்காலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# மயங்கி விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(எஸ்.ரகுதீஸ்)

வல்வெட்டித்துறையில் வங்கிக்கு முன்பாக மயங்கி விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாவடி சமரபாகுவைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளும் தந்தையான மகாதேவன் திலகராசா (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் உள்ள வங்கி ஒன்றுக்கும் முன்னால் நேற்று சனிக்கிழமை அவர் மயங்கிய நிலை காணப்பட்டதை எடுத்து முச்சக்கர வண்டி சாரதி ஒருவர் அவரை விட்டு அழைத்து சென்றுள்ளார்.

பின்னர் அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது அவர் உயிரிழந்து விட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்த மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார். சாட்சிகளை வல்வெட்டித்துறை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

அளித்தது என்பதை மறுப்பதற்கு இல்லை.

இந்தச் செய்தியை உரிய சமய சந்தர்ப்பத்தில் தேடி எடுத்துக் கொண்டு வந்து அம்பலப்படுத்திப் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியவர் 'முரசு' பத்திரிகையின் ஆஸ்தான செய்தியாளர்களில் ஒருவரான நடராஜா லோகதயாளன்தான்.

இந்தச் செய்தி வெளியான பின்னணியில் சில விடயங்களைக் குறிப்பிடுவதும் அவற்றைப் பதிவாக்குவதும் முக்கியம் என்று நினைக்கிறேன்.

மூன்று மாத காலத்துக்குள் அந்தப் பிரதேச மக்கள் தங்கள் காணிக்கான உரித்துக்களை உரிய ஆதாரங்களோடு நிரூபிக்கவும், உரிமை கோரவும் தவறினால் அக்காணிகள் அரச சொத்தாகப் பிரகடனப்படுத்தப்படும் என்ற விஷமத்தனமான ஏற்பாடே இந்த வர்த்தமானியின் சாராம்சம்.

உண்மையில் கடந்த மார்ச் 28 ஆம் திகதிய வர்த்தமானியிலேயே இந்த அறிவிப்பு வெளியாகிவிட்டது. சத்தம் சந்தடியின்றி வெளியான இந்த அறிவிப்புக் குறித்து பெரிதாக எதுவும் பேசப்படவில்லை. சம்பந்தப்பட்ட விடயத்துடன் தொடர்புடைய நமது அதிகாரிகள் பலரே பம்மிக் கொண்டிருந்துவிட்டார்கள். ஊடகங்களோ, செய்தியாளர்களோ கவனம் செலுத்தவில்லை. ஆனால் இயல்பாகவே வர்த்தமானி அறிவித்தல்களில் ஒரு கண் வைத்திருக்க வேண்டும் என்ற கவனிப்பு கொண்ட செய்தியாளர் லோகதயாளன் இதனை எவ்வாறோ மணந்து பிடித்து எடுத்துக் கொண்டு வந்தார். ஆயினும் எடுத்த எடுப்பிலேயே அந்தச் செய்தியை உடனே நாம் வெளியிட்டு விடவில்லை. காத்திருந்தோம். அதற்கு சில காரணங்கள் இருந்தன.

ஒன்று – தனி ஒரு வர்த்தமானி அறிவித்தலாக அல்லாமல், பல அறிவித்தல்களின் தொகுப்பாக அவை இருந்தன. அதனால் அவை எந்தெந்தப் பிரதேசங்களை சேர்ந்தவை என்பதை வர்த்தமானி அறிவிப்புகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராய்ந்து படித்து, கூட்டுச் சேர்த்து உருப்படியாக்க வேண்டி இருந்தது.

அடுத்தது – அந்த வர்த்தமானி அறிவித்தல் ஒவ்வொன்றிலும் அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவுகளை எல்லாம் ஒன்று சேர்த்துக் கூட்டித் தொகுத்து மொத்த அளவீட்டைக் கண்டறிய வேண்டி இருந்தது.

இந்த இரண்டையும் லோகதயாளன் தாமே முன்னெடுத்துச் செய்தார். இப்படி செய்த உடனும் அந்தச் செய்தியை நாங்கள் பிரசுரிக்கவில்லை. அது பற்றிக் கலந்துரையாடினோம். ஒரு தீர்மானத்தை எடுத்தோம்.

நடக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் இந்த விவகாரம் காத்திரமான பங்களிப்பை செலுத்தும், தமிழ்த் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பும் என்று நாங்கள் ஆரம்பத்திலேயே ஊகித்துக் கொண்டோம். ஆகையினால் இந்தச் செய்தி வெளியான கையோடு அது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தும் என நாங்கள் எதிர்பார்த்தோம். அதுவே நடந்தது. நிலத்தைக் கபளீகரம் செய்யத் தந்திரமாகத் திட்டமிட்டு, சதி நடவடிக்கை போன்ற வடிவத்தில் முன்னெடுக்கும் அரசு, அத்தகைய செய்தி தொடர்பிலும், தேர்தலுக்கு முன்னர் தன்னை சுதாகரித்து, தமிழ் மக்களை மீண்டும் குழப்பத்தில் ஆழ்த்தும் பதில் நகர்வுகளை முன்னெடுக்கும், அத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதற்கு இடமும் வாய்ப்பும் அளிக்காமல், அந்தச் செய்தியை உரிய சமயத்தில் அம்பலப்படுத்தி வெளிப்படுத்த வேண்டும் என்று கருதினோம். அதனால் தேர்தல் இறுதி நேரம் வரை விவகாரத்தை பேண வேண்டியிருந்தது.

மே 6 ஆம் திகதி வாக்களிப்பு. 3 ஆம் திகதி நள்ளிரவோடு பிரசாரம் முடிவடைந்துவிடும். ஆகவே இந்த விவகாரத்தை தமிழ் மக்கள் மத்தியில் விதைத்து, அதை தேர்தல் சூறாவளியாக மாற்றுவதற்கு மூன்று நாள்கள் தேவை எனக் கணக்கிட்டோம்.

மே முதலாம் தேதி மே தின கூட்டங்களில் – உரைகளில் – இந்த விவகாரம் அதிர்வை ஏற்படுத்தக் கூடியதாக மாற்றினால், அது தமிழ் மக்களை நன்கு சென்றடைந்து, தமிழ்த் தேசிய உணர்வெழுச்சி சம்பந்தப்பட்ட விடயத்தில் உரிய மாற்றங்களை ஏற்படுத்தும் எனக் கருதினோம். அதனால் இவ்வாறு தமிழ் மக்களின் காணிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் கபளீகரம் செய்ய கொழும்பு அரசு திட்டமிட்டுக் காய் நகர்த்துகின்றது என்ற செய்தியை, வர்த்தமானி விவரங்களோடு, மே தினம் அன்று அதிகாலையில் முரசில் முதல் பக்கத் தலைப்புச் செய்தி விவரமாக அம்பலப்படுத்தத் திட்டமிட்டுக் காரியமாற்றினோம்.

மார்ச் 28ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவிப்பின் அடிப்படையிலான அந்தச் செய்தி ஏப்ரல் மாதத்தில் வெளியாகாமல் மே முதலாம் திக்தி – மே தினத்தன்று – பிரசுரமாகி மூன்றாம் திகதி நள்ளிரவு தேர்தல் பிரச்சாரம் முடிவடைவதற்கிடையில் கனகாத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தி அடங்கியது.

அரசு தரப்பின் கோயபலஸ் பிரசாரப் பீரங்கிகள் இந்த வர்த்தமானி அறிவிப்புகளின் உண்மைத் தன்மையை அறிந்து, சுதாகரித்து, அந்த சூறாவளி பிரசாரத்தை எதிர்கொள்வதற்குத் தம்மைத் தயார் செய்வதற்கு முன்னரே தேர்தல் பிரசார காலம் மே மூன்றாம் திகதி நள்ளிரவோடு முடிந்துவிட்டது.

ஆக, இந்தச் செய்தியைத் தேடிக் கண்டுபிடித்து, சேகரித்து, சரியான வடிவத்தில் செய்தியாக்கி, உரிய சமயத்தில் அதை வெளிப்படுத்தி, நடந்து முடிந்த தேர்தலில் அதை ஓர் அதிர்வலை விவகாரமாக மாற்றிய நமது முரசின் ஆஸ்தான செய்தியாளர் தனித்துவமான பாராட்டுக்குரியவரே.

இந்த விவகாரத்தில், இத்தகைய வர்த்தமானி அறித்தல் அரசுக்கு சட்ட ரீதியான உரித்திருக்கின்றதான நடவடிக்கை என்று பேசப்பட்டாலும், இந்த ஆக்கிரமிப்பு முயற்சியை பொது மக்களின் எதிர்ப்புப் போராட்டத்துக்கு அப்பால், நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்தித் தடுப்பதற்கான சட்ட வாய்ப்புகள் தாராளமாக இருக்கின்றன என்று ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கருதுகிறார் எனத் தெரிகின்றது.

இதே வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மருத்துவர்கள் சிலர் கொள்ளளவு செய்த காணிகளை, இதே போன்று அரசு வர்த்தமானி அறிவித்தல் மூலம் தனதாக்க முயற்சி எடுத்த போது, அதற்கு எதிராக வழக்கு தொடர்ந்து, அந்த முயற்சியை முறியடித்த சட்ட அனுபவம் சுமந்திரனுக்கு உண்டு என்று தெரிகிறது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் 1931 ஆம் ஆண்டின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் (Land Settlement ordinance - 1931) கீழ் விடுக்கப்பட்டது.

காணிகளை அரசு மற்றும் தனியாரினுடையவை என்று அடையாளம் கண்டு நிர்ணயிப்பதற்கான ஒரு நடவடிக்கை 1931 காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட போது, அந்த நிர்ணயத் தேவைக்காகக் கொண்டுவரப்பட்ட சட்டத்தை காலாகாலமாகப் பயன்படுத்தி, காணிகளை நிர்ணயிக்க முடியாது என்பது மக்கள் தரப்பில் இந்த வழக்கில் ஒரு சட்ட வாதமாக முன் வைக்கப்பட வாய்ப்பு உண்டு என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

ஏற்கனவே வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் மருத்துவர்களின் காணிகளை அரச காணி என்று நிரூபிப்பதற்கான ஆவணங்கள் ஏதும் தன்னிடம் இல்லாத நிலையில், அவற்றைத் தன்னுடையவையாக அபகரிக்க அரசுத் தரப்பு முற்பட்ட போது, அதனை சட்டவாதம் நடத்தி தடுத்த சுமந்திரன், அதே சட்ட வாதத்தின் மூலம் இந்த வர்த்தமானி மூலமான காணி ஆக்கிரமிப்பு நடவடிக்கையையும் தடுத்து நிறுத்த முயற்சிக்கலாம் என்று கருதுகிறார்.

ஆகையினால் ஒருபுறம் மக்கள் போராட்டமாகவும், மறுபுறம் சட்டப் போராட்டமாகவும் இந்த விடயத்தை முற்கொண்டு சொல்ல அவர் முயற்சிப்பார் எனத் தெரிகிறது.

இன்றைய தினம் காலையில் வடமராட்சி கிழக்கில் சம்பந்தப்பட்ட காணிகளின் உரிமைகளைக் கொண்டுள்ள உரித்தாளர்களோடு அவர் ஆலோசனை நடத்தும் போது, மேற்படி வழக்குக்கான வாய்ப்புகள் குறித்தும் தீர்மானிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

### யானை தாக்கி...

யானை தாக்கியதில் 8 வயது சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



# மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டத்தைத் திருத்துவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியனால் நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டுள்ள சட்ட மூலம் வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டத்தைத் திருத்தும் வகையில் தனிநபர் பிரேரணையாக இந்த சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஏலவே கடந்த நாடாளுமன்றில் இவ்வாறானதொரு சட்டமூலத்தை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முன்வைத்திருந்தார்.

# போதைப்பொருட்களுடன் 475 பேர் ஒரே நாளில் வசமாகச் சிக்கினர்!

நாடளாவிய ரீதியில் ஒரே நாளில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருட்களுடன் 475 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஹெரோயின் போதைப்பொருளுடன் 178 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 131 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 158 பேரும், மதனமோதக போதைப்பொருளுடன் 3 பேரும், கஞ்சா செடிகளுடன் 5 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 208 கிராம் 870 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 289 கிராம் 962 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 1கிலோ 118 கிராம் 761 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 26 கிராம் 400 மில்லிகிராம் மதனமோதக போதைப் பொருளும், 9072 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**அடுத்த ஆண்டு...**

சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“அரசின் பயணம் சிறப்பானதாக இல்லை எனத் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த மக்களே கூறுகின்றனர். நாட்டில் அரசு என்ற ஒன்று இருக்கின்றதா என்றும் தெரியவில்லை.

மக்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசிடம்எந்தப்பதிலும்இல்லை.கொள்கையற்ற அனுபவமற்ற இந்தக் குழுவிடம் நாட்டைக் கையளித்தால் என்னவாகும் என்பதை அன்றே நாம் தெரிவித்திருந்தோம்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 23 இலட்சம் வாக்குகளை இழந்திருக்கின்றது. நாம் மேலதிகமாக 3 இலட்சம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றோம். இந்த அரசுக்கு நாட்டைக் கொண்டு செல்ல முடியாது என அரச அதிகாரிகளும், நிறுவனத் தலைவர்களும், துறைசார் நிபுணர்களும் குறிப்பிடுகின்றனர். அடுத்த ஆண்டு இந்த நாளில் நாட்டு மக்களால் அநுர அணியினர் ஆட்சியில் இருந்து துரத்தியடிக்கப்படுவார்கள்.

சுயேச்சைக் குழுக்களுடன் ஒப்பந்தம் செய்து கொழும்பு மாநகர சபையில் அரசு ஆட்சியமைத்து, தோல்வியடைந்த அந்தப் பெண் வேட்பாளரிடம் கொழும்பு ஒப்படைக்கப்பட்டால் அடுத்த ஆண்டு மே மாதத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே இந்த அரசின் வீழ்ச்சி ஆரம்பமாகும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த ஆதரவாளர்களாலேயே இந்த அரசு வீழ்த்தப்படும்.

மக்களுக்கு உப்பினைக் கூட வழங்க முடியாதுள்ள அநுர அரசு ஏனைய காரணிகள் குறித்துப் பேசுவதில் பயன் என்ன? எதிர்க்கட்சிகளுக்குப் பாதாள உலகக் குழுவினருடன் தொடர்பிருக்கின்றது என்றால், ஆதாரத்துடன் அதனை நிரூபித்து சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யுமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றேன்.

தேசிய மக்கள் சக்திக்க வாக்களித்தவர்களே நாடு தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும். அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கின்றோம்.” – என்றார்.

---

**ராஜபக்ஷக்களை...**

“ராஜபக்ஷக்களைப் பழிவாங்குவது தேசிய மக்கள் சக்தி அரசின் நோக்கம் அல்ல. ராஜபக்ஷக்கள் இழைத்த குற்றங்கள் தொடர்பில் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும். அதில் நாம் தலையிட மாட்டோம்.” – என்றும் அவர் குறிப்பிட்டார்

‘ராஜபக்ஷக்களைச் சிறைக்கு அனுப்புவதால் நாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடையாது. ராஜபக்ஷக்களையும், கடந்த அரசுகளையும் விமர்சித்துக் கொண்டிருக்காமல் சமூகக் கட்டமைப்பில் காணப்படும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுங்கள்.’ – என்று அநுர அரசிடம் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்திருந்தார்.

நாமல் எம்.பியின் இந்தக் கருத்து தொடர்பில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ராஜபக்ஷக்களின் கொடூர ஆட்சிக்கு முடிவு கட்டவே நாட்டு மக்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். இறுதியில் ராஜபக்ஷக்களை மக்கள் வீட்டுக்கு அனுப்பினார்கள்.

மூன்றிலிரண்டுப் பெரும்பான்மைப் பலத்துடன் தேசிய மக்கள் சக்தி கட்சியை மக்கள் ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வருகின்றோம். விரைவில் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்போம். ராஜபக்ஷக்கள் எமக்கு அறிவுரை கூறத் தேவையில்லை.” – என்றார்.



# அமெரிக்க வரி விதிப்பு குறித்து கலந்துரையாட இலங்கை குழுவினர் வொஷிங்டனுக்கு விஜயம்

அமெரிக்காவின் வரி விதிப்புக் குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கையின் பிரதிநிதிகள் குழுவொன்று வொஷிங்டனுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி அலுவலகத்தின் அழைப்பின் பேரிலேயே இந்த குழு வொஷிங்டனுக்கு பயணிக்கவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை நோக்கமாகக் கொண்ட இரண்டாவது நேரடி சந்திப்பு இதுவாகும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய பொருளாதார முன்னுரிமைகளைக் கருத்திற் கொண்டு, வர்த்தக ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான புதிய வழிகளை ஆராய்தல் மற்றும் இலங்கைக்கு நன்மை பயக்கும் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளல் என்பன இந்த கலந்துரையாடலின் நோக்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்திற்கு முன்னதாக, நாட்டின் நலன்கள் நன்கு பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் உயர்மட்டக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

எதிர்வரும் பேச்சுவார்த்தைகளில் நல்ல பலன்களை எட்டுவதற்கு கவனம் செலுத்த வேண்டிய பொருளாதார உத்திகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் சந்திப்பில் நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன, வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கே.ஏ. விமலேந்திரராஜா, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தி நிர்மால் விக்னேஷ்வரன் மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி தர்ஷன பெரேரா ஆகியோர் பங்கேற்றனர்.











# மாலனி பொன்சேகாவின் இறுதி நிகழ்வு அரச கௌரவத்துடன் நாளை இடம்பெறும்

மறைந்த புகழ் பெற்ற நடிகை மாலனி பொன்சேகாவின் இறுதி சடங்குகள் நாளை திங்கள்கிழமை சுதந்திர சதுக்கத்தில் அரச கௌரவத்துடன் நடைபெற உள்ளன என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கைத் சினிமாவின் ராணி என்ற அந்தஸ்த்து பெற்ற மறைந்த மாலானி பொன்சேகாவின் இறுதிச் சடங்குகளுக்கான வசதிகளை வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடல் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோர் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

மாலனி பொன்சேகாவின் பூதஉடல் இன்று தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கனி மண்டபத்திலும், நாளை சுதந்திர சதுக்க மாளிகையிலும் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். இறுதிச் சடங்குகள் நாளை திங்கள் கிழமை பிற்பகல் சுதந்திர சதுக்க வளாகத்தில் அரச கௌரவத்துடன் நடைபெறும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாலனி பொன்சேகாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்த நாடு முழுவதிலுமிருந்து வரும் மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த நீண்ட கலந்துரையாடலும் இதன்போது நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார, புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீர, மாலனி பொன்சேகாவின் உறவினர்கள், கலைஞர்கள் மற்றும் பலர் கொண்டனர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அமைச்சரவையில் மாற்றம்?

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆறு மாதத்தைப் பூர்த்தி செய்யும் இந்தக் கட்டத்தில் அமைச்சரவை மாற்றம் ஒன்றை செய்வது குறித்து உயர்மட்டத்தில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தல் முடிந்த கையோடு இத்தகைய அமைச்சரவை மாற்றம் ஒன்று நடைபெறுவதற்கான சாத்தியங்கள், ஏது நிலைகள் தென்படுகின்றன என்று தேர்தலுக்கு முன்னரே கோடி காட்டி இருந்தோம்.

அமைச்சுகள் மற்றும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட ஏனைய அரச கட்டமைப்புகளின் வினைதிறனை அதிகரிக்கும் நோக்கிலேயே இந்த மாற்றத்தை மேற்கொள்ள ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன என்று கூறப்பட்டது.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் அரச நிறுவனங்களின் உயர் பதவிகளிலும் பல்வேறு அதிரடி மாற்றங்களை மேற்கொள்ள அரசாங்கம் உத்தேசித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சரியோ, பிழையோ ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி இப்போதுதான் தனித்து முதல் தடவையாக ஆட்சி அதிகாரத்துக்கு வந்திருக்கின்றது. அதனால் அமைச்சர்கள், அவர்களின் பணிகள், அந்தப் பணிகளை ஆற்றக்கூடிய தகுதி உடையவர்கள் சம்பந்தமான விடயங்களில் அக்கட்சிக்கு இது புது அனுபவம். பெரும்பாலும் அமைச்சர்கள் நியமனமும், அவர்களின் திறமை தொடர்பான எதிர்பார்ப்பும் சோதனை மற்றும் பிழை (வுசயைட யனெ நசசழச) முறைமையின் கீழ்தான் ஆரம்பத்தில் முயற்சிக்கப்பட்டிருக்கும்.

ஆகையினால் அமைச்சர்களின் ஆறு மாத கால பங்கு பணிகள், பெறுபேறுகள், திறமைகள், நிர்வாகத் தகைமைகள் போன்றவை குறித்து இந்த ஆறு மாத கால அனுபவங்களின் பின்னர், அவற்றை மதிப்பாய்வு செய்து, அதற்கேற்ப உரிய முடிவுகளை எடுக்க வேண்டிய கடப்பாடு அரசு தலைமைக்கு இருப்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

தமது ஆட்சித் தரப்பின் கொள்கை, கோட்பாடுகள், எதிர்பார்ப்புகள், நிலைபாடுகளை உள்வாங்கி, சரியான முறையில், நேர்மையாக, நிர்வாகத் திறமையோடு அமைச்சுக்களைக் கொண்டு நடத்திய அமைச்சர்கள் யார், அவற்றில் பின்னடைவு கண்ட அமைச்சர்கள் யார் என்பவற்றை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப அமைச்சர்களையும் அமைச்சுக்களையும் மாற்றுவது அரசு தலைமைக்கு தவிர்க்க முடியாத கட்டாயமாக இருக்கும் என்பது புரிந்து கொள்ளத்தக்கதே.

அமைச்சரவை மாற்றம் விரைவில் நடைபெறக்கூடும் என்று அரசுத் தரப்பில் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். அரசுக்குச் சொந்தமான ஐ.ரி.என். தொலைக்காட்சிச் சேவையின் நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் பிமல் ரத்நாயக்க தாம் உட்பட அமைச்சரவை உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளில் மாற்றங்கள் குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

அமைச்சர் ரத்நாயக்கவின் கூற்றுப்படி, அவர் உட்பட பல அமைச்சர்களின் கோரிக்கைகள் காரணமாக இந்த அமைச்சரவை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படவிருக்கின்றது.

சில சந்தர்ப்பங்களில், புதியவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படலாம் என்றும், மறுசீரமைப்பு செயல்முறை ஏற்கனவே நடந்து கொண்டிருக்கலாம் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் 25 இற்கும் குறைவான அமைச்சர்களுடனேயே இயங்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸ்நாயக்க கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போதே கூறியிருந்தார்.

என்றாலும், இப்போது 22 அமைச்சர்களுடனேயே அமைச்சரவை செயல்படுகிறது. இன்னமும் 3 அமைச்சர்கள் வரை நியமிப்பதற்கான சந்தர்ப்பம் அரசாங்கத்துக்கு உள்ள சூழலிலேயே அமைச்சரவை மாற்றம் குறித்த ஆலோசனைகள் இடம்பெற்று வருகின்றன.





# முதல் தடவையாக 3,147 தாதியர்கள் அரச சேவையில் இணைக்கப்பட்டனர்

3,147 தாதியர்கள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இதற்கான நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது 08 விசேட தர தாதியர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

வரலாற்றில் அதிகளவான தாதியர்கள் அரச சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும் என சுகாதார அமைச்சு கூறியுள்ளது.













# வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளே காரணம்

## சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு



கடந்த அரசாங்கத்தின் விளைவுகளால் நோயாளர்கள் இன்று அவதிப்படுகின்றனர் என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தாதியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள 3,147 பேருக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் மருந்துகளில் 65 சதவீதமானவை இறக்குமதி செய்யப்படுவதுடன், 35 சதவீதமானவையே நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த கொள்வனவு செயன்முறைக்கு கால அவகாசம் தேவைப்படும்.

இந்த வருடத்தின் பயன்பாட்டுக்கான மருந்துகளில் 67 வகையான மருந்துகளுக்கு மாத்திரமே கடந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் முந்தைய அரசாங்கம் பொருட்கோடலை சமர்ப்பித்திருந்தது.

முறையாக, மருந்து கொள்வனவு செயன்முறையை முன்னெடுக்காதமையினால் ஏற்பட்ட பின்விளைவுகளையே தற்சமயம் வைத்தியசாலைகளில் சந்திக்க நேரிட்டுள்ளது.

சர்வதேச சுகாதார அளவுகோல்களின் அடிப்படையில் இலங்கைக்கு ஓர் உயர்வான இடம் உள்ளதுடன், அதனைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையிலிருந்து, 2 வருட ஒப்பந்த அடிப்படையில் தாதியர்கள் உள்ளிட்ட சுகாதார பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு குவைட் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.”– என்றார்.



# நாடாளுமன்ற ஊழியர்களுக்கான உணவு விலைகளில் மாற்றம்

நாடாளுமன்ற ஊழியர்களுக்கான உணவு விலைகளில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தின் நிர்வாக மற்றும் நிர்வாகம் சாரா ஊழியர்களுக்கான உணவு கட்டணங்களை திருத்தியமைக்க கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற குழு கூட்டத்தில் திர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த முடிவுகளை மீளாய்வு செய்ய சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நாடாளுமன்ற குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்படி நாடாளுமன்ற ஊழியர்களுக்கான உணவு விலையை அடுத்த மாதம் முதல் மறுசீரமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

நிர்வாக மட்ட அதிகாரிக்கு உணவுக்காக மாதத்திற்கு 4,000 ரூபா மற்றும் நிர்வாகமற்ற ஊழியருக்கு மாதம் 2,500 ரூபா என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



# தீவிரமடைந்துள்ள சிக்குன்குனியா: பேராசிரியர் நீலிகா மலவிகே தகவல்

இலங்கையில்சுமார் 16 ஆண்டுகளுக் குப் பிறகு சிக்குன்குனியா வைரஸ் நோய் பெரிய அளவில் பரவி வருகிறது எனவும் ஒக்ஸ்போர்ட் நானோபோர் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் இவ்விடயம் வெளிப்பட்டுள்ளது என்றும் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.

தனது எக்ஸ் தளத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"தற்போது பரவி வரும் சிக்குன் குனியா வைரஸ் இந்து சமுத்திரத்தில் பரவக் கூடிய வைரஸ் பரம்பரையைச் சேர்ந்தது. இது பல தனித்துவமான பிறழ்வுகளுடன் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை தற்போது 16 ஆண்டுகளுக் குப் பிறகு, 2024 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்து ஒரு பெரிய சிக்குன்குனியா பரவலை எதிர்கொண்டு வருகிறது.

தற்போது பரவி வரும் சிக்குன்குனியா வைரஸ் பிறழ்வின் முழு மரபணு ஆய்வினை நாம் மேற்கொண்டோம்.

மேலும் அது தெற்காசியாவில் தற்போது பரவி வரும் ஊர்ஜமுஏ பிறழ்வைப் போலவே இந்து சமுத்திர பரம்பரையைச் சேர்ந்தது என்பதைக் கண்டறிந்துள்ளோம்.

இந்த புதிய பிறழ்வுகளில் சில முன்னர் வகைப்படுத்தப்படாததால், அவை கொசுக்களுக்குள் உடற்தகுதி, வைரஸ் பிரதிபலிப்பு மற்றும் நோயெதிர்ப்புத் தவிர்ப்பை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைக் கண்டறிவது முக்கியமான தாகும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# 9 லட்சத்தை கடந்தனர் சுற்றுலாப் பயணிகள்

2025 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து மே மாதம் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 988,669 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 188,694 ஆகும்.

மேலும், ரஷ்யாவிலிருந்து 109,840 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 93,248 சுற்றுலாப் பயணிகளும், ஜெர்மனியிலிருந்து 67,381 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 55,587 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 54,223 சுற்றுலாப் பயணிகளும், அவுஸ்திரேலியாவிலிருந்து42,301சுற்றுலாப்பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

31

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டு, இனப் பிரச்சினைக்கான தீர்வு அரசியல் ரீதியாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேச நிர்ப்பந்தங்கள் 2010 இல் எழுந்த நிலையில், ஒற்றையாட்சி முறைமையில் இருந்து விலகி, எதுவிதமான அதிகார பகிர்வும் வழங்கப்படுவதை எதிர்த்து, கட்சிக்குள்ளும், ஆட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தரப்பினருடனும் உக்கிரமாகப் போராடியவர்கள் ஜே.வி.பியின் தலைவர்களான சோமவன்ஸ அமரசிங்கவும், விமல் வீரவன்ஸவும் ஆவர். விமல் வீரவன்ஸவினதும், அவரது ஆதரவாளர்களினதும் கருத்துக்கள் தமிழினத்திற்கு எதிரான அவதூறுகளாகவும் இனவாதமாகவும் பார்க்கப்பட்டு, அவர்கள் கட்சியினாலேயே அந்நியப்படுத்தப்பட்டு, பின்பு கட்சியிலிருந்து வெளியேறினார்கள். விமல் வீரவன்ஸவின் அவதூறுப் போக்குகள் மாத்திரமல்ல, அவரதும் அவரது மனைவியினதும் ஊழல்களும் அவரது வெளியேற்றத்தில் பங்காற்றின.

2015 இல் அநுரகுமார திஸநாயக்கா ஜே.வி.பி. தலைமையை ஏற்ற காலத்தில் இருந்து, இனவாத அவதூறுகள் கட்சிக்குள் வலுவாக குறைந்து, இனவாதம் நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும் என்ற கொள்கை அதிகம் பேசப்பட்டது. தேசிய மக்கள் சக்தியை ஜே.வி.பி. தோற்றுவித்த போது, அதுவே கொள்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. நல்லிணக்கத்திற்கு அது அவசியமானது எனப் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம் கிட்டு பூங்காவில் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைக்கான ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவின் உரையில் "இனவாதத்தைக் கையில் எடுத்து, இந்த நாட்டில் முரண்பாடுகளை ஏற்படுத்த சிலர்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

முயற்சிக்கிறார்கள். நாட்டில் எந்த விதத்திலும் இனவாதம் தலை தூக்க அனுமதிக்க மாட்டோம். இனவாதத்தை தோற்கடிக்க அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம்.” – என்றார்.

இந்தப் போக்கு தேவையானதுதான். வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இனவாதத்தால் தமிழ் மக்களிடையே எழுந்த அவர்களது அபிலாசைகளையும் உள்ளடக்கிய செயல்திறனும் இந்த நிலைப்பாட்டிலும் செயற்பாட்டிலும் இருக்க வேண்டும்.

தமிழ்க் கைதிகளின் விடுதலை பற்றிய விடயத்தில் முன்னோடியான சான்றுகள் பல இருக்கும் போதும், அதனை அரசியல் தற்றுணிவுடனும் உறுதியுடனும் தீர்மானம் எடுக்காமல் தவிர்ப்பதும் எந்தக் காரணங்களால்?

அதே கிட்டு பூங்கா பரப்புரைக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா, எந்த ஒரு தொல்லியல் சான்று கிடைக்கப் பெற்றாலும், அதனை சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற கண்ணோட்டத்தில் பார்க்காது, தொல்லியல் சான்றுகள் எங்கள் நாட்டின் மரபுரிபையாகவே பார்ப்போம் என்கிறார். இந்தப் பார்வைகள் எந்த கோணங்களில் இருக்கின்றன? தையிட்டியைப் பொறுத்தவரை மரபுச் சான்றுகள் தெளிவாக இருந்தும், நிலைமையைச் சாதகமாக்கி எழுந்துள்ள புதிய கட்டுமானங்கள் தெரிவிக்கும் ஆதாரங்கள் இவை இராணுவத்தின் பௌத்த பேரினவாதப் பின்னணியில் நடக்கின்றன என்பதாகும். அது தெரிந்திருந்தும் நீதியாக நடப்பதற்கு – நல்லிணக்கத்திற்காகச் செயல்படுவதற்கு – பின்னடிக்கப்படுகின்றது. அந்தப் போக்கை எந்தக் கோணத்தில் இருந்து பார்ப்பது?

ஊழலற்ற அரசாங்கம் ஒன்றை எதிர்பார்த்து, நாட்டின் வருமானங்கள் முன்னைய அரசுகள் போல் இல்லாமல் மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடப்படும், இனப்பிரச்சினைக்கு யாவரும் ஏற்கும் இணக்கமான தீர்வு புதிய அரசமைப்பின் மூலம் பெறப்படும் என்ற வாக்குறுதிகளிலும், பழைய தலைவர்களின் மேல் மக்கள் கொண்ட வெறுப்புக்களாலுமே தேசிய மக்கள் சக்தியை மக்கள் தேர்ந்தெடுத்தார்கள். அதே கொள்கைகளை வைத்து தேசிய மக்கள் சக்திக்காக அநுரா 2019 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போதும், அச்சமயத்தில் பெற்றவை வெறும் மூன்று சத வீத வாக்குகளே.

நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய பொருளாதார நிலையில் மாற்றம் தேவை என்பது இம்முறை மக்களின் தீர்மானமாக இருந்தது. சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்திய கடன் ஒப்பந்தங்களை ரத்துச் செய்வோம், அன்றில் அதனை மீளப் பரிசீலித்து புதிய ஒழுங்குகள் அமைக்கப்படும் என சொல்லப்பட்டாலும், பதவி ஏற்றபின் அரசாங்கம் அதே ஒப்பந்தத்தை அப்படியே ஏற்று நடைமுறைப்படுத்துகின்றது. முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கையை கைக்கொள்ளாத இடதுசாரித்துவம், இன்று உலக அடங்கில் பரவிய நிலைகளால், தனியார் முதலாளித்துவத்தில்தான் நாடு முன்னேறலாம் எனக் கொள்கைகளில் மாற்றத்தை நாடுகிறார்கள். எந்த பிரச்சினைகள் நாட்டை அதல பாதாளத்துக்குக் கொண்டு செல்ல முக்கிய காரணமாக இருந்தனவோ, அந்தக் காரணிகளை இனம் கண்டு, அவற்றை அப்புறப்படுத்துவதில் குறியாக இருக்க வேண்டும். அவை அப்புறப்படுத்தப்பட்டால்தான் நாட்டை மீட்பது பற்றிச் சிந்திக்க முடியும்.

தமிழ் மக்களது உரிமைக் கோரிக்கைகளை அரசின் பலத்தால் அடக்க முற்பட்ட நடவடிக்கைகள்தான் நாட்டைச் சுற்றி எழுந்து, நாட்டை இந்த அகல பாதாளத்துக்குள் தள்ளி, அதன் முள்ளந்தண்டையே உடைத்து விழுத்தக் காரணமாயிற்று. அந்த தமிழ் மக்களின் அபிலாசைகளாக அந்த விடயம் மாறியதும், பின்னர் அதனை அழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளில் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும்,

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

இராணுவமும் ஆதாயம் தேடி, தங்களது வாழ்வுகளை மேம்படுத்த அவற்றைப் பாவித்ததும், கண்கூடாகப் பார்க்கப்பட்டவை.

அவற்றை அடைவதற்கு ஜனநாயக மரபுகளைத் தூக்கி எறிந்து, தங்களுக்கு இருந்த பெரும்பான்மையை சிங்கள அரசியல்வாதிகள் பாவித்து, குற்றங்களும் குறைகளும் கொண்ட அரசமைப்பு மற்றும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவற்றை அரசியல் ரீதியாக நிர்வாகப் படுத்தியதும், தேர்தலுக்கு தேர்தல் மக்களை ஜனநாயகம் என்ற போர்வையில் வாக்களிக்க வைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் அதன்பின் அதிகாரப் போர்வையில் மக்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய தேவையுமற்ற முறையில், அவர்களுக்கு உரிய அரசியல், பொருளாதார, சமுதாய உரிமைகளைக் கூட அமல்படுத்திக் கொள்ள முடியாத விதங்களில், அரசமைப்புச் சட்டங்களை தங்களது வசதிகளுக்காக மாற்றியமை என விடயங்கள் தொடர்ந்தன.

இப்படித் தங்களைச் சுற்றி வனையப்பட்ட ஒரு கூட்டுப் புழுவின் கூட்டில் (Cocoon) அடைக்கப்பட்டமை போல வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மக்கள் தள்ளப்பட்டார்கள். நாட்டின் ஆசான்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் நாட்டிலோ, புலம்பெயர்ந்த நாடுகளிலோ, நாட்டைப் பீடித்திருந்த இந்த இனவாதத்தில் பக்கச் சார்பாக தங்களை இணைத்துக் கொண்டமையால், இனவாதத்தை முன்னெடுத்த தலைவர்களை மீறி, தேசத்தின் நன்மை கருதியாயினும் இவற்றில் இருந்து மேல் எழுந்து, எதையும் செய்ய முடியாதவர்களாக இருந்தார்கள்.



அப்படியாக ஏற்பட்ட சொற்ப சந்தர்ப்பங்களில் ஓரிரண்டை சொல்வதானால் –

ஆயுதங்களின் பயங்கரங்களுக்கு இடையில் விவேகத்தையும் தெளிவையும் நியாயத்தையும் நிலை நிறுத்த எழுந்த பேராசிரியர்களின் மனித உரிமைகளுக்கான அமைப்பு (University Teachers For Human Rights) - 1987 இல் செய்யப்பட்ட இந்திய, இலங்கை ஒப்பந்தம் – ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானத் தீர்வுப் பொதி – நோர்வேயின் அனுசரணையில் நடந்த சமாதான முயற்சிகள் – 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்கவின் ஊழலுக்கு எதிரான, மனித உரிமைக்கான நடவடிக்கைகள், செயற்பாடுகள் – அதனைத் தொடர்ந்து நல்லாட்சி காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜயம்பதி விக்ரமரத்தின, அநுரகுமார திஸநாயக்கா, சுமந்திரன், சித்தார்த்தன் போன்றோர் பங்கு பற்றி உருவாக்க முனைந்த புதிய அரசமைப்பு – பின்னர் எழுந்த அறகலயப் போராட்டங்கள் – என்பவற்றை குறிப்பிடலாம். ஆனால் இனவாதமும் அதில் குடி கொண்ட அரசியலும் இவற்றைச் செயல்பட விட்டதில்லை.

புத்திஜீவிகள், மாற்றுச் சிந்தனையாளர்கள் உட்புகுந்தால், அதிகாரங்களைக் கட்டுப்படுத்தினால், அன்றில் அறிமுகப்படுத்தினால், அவை வேர் விட்டு வளர்ந்து விடுமோ என்ற அச்சங்களில் இனவாதங்கள் அரசியல் கொள்கைகள் ஆக்கப்பட்டு, நல்லெண்ணச் சிந்தனைகள் முளைகளிலேயே கிள்ளிவிடப்பட, இவற்றில் எழும் ஏமாற்றங்களையும், விரக்திகளையும் தேசிய மக்கள் சக்தியின் பங்காளி உறுப்பினர்களிடையே காண முடிகிறது. அறகலய கொள்கைகளின் அத்திவாரத்தில் வெற்றி பெற்று, அரசமைத்த ஐக்கிய மக்கள் சக்தி அரசில் ஜே.வி.பியின் மேலாதிக்கத்தினால் தாங்கள் வாக்குறுதி அளித்த கொள்கைத் திட்டங்களை அமுல்படுத்தத்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

தடுமாறி, திரிசங்கு நிலையில் இருக்கிறார்கள். அந்தத் திரிசங்கு நிலையில் இனவாதம் எந்தப் பக்கத்தில் என்பதே மழுங்கடிக்கப்பட்டு, ஜே.வி.பியின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தான் இனவாதம் பேசுவோர்களுக்கு எதிராக – அதாவது இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்தவை இனப்படுகொலை எனப் பிரசாரம் செய்வதை – சட்டமூலம் தடை செய்வேன் எனப் பேச்சுச் சுதந்திரத்திற்கே ஆப்பு வைக்கும் விதத்தில் பயமுறுத்துகிறார்.

வட்டுக்கோட்டை தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர், 1983 இக் அதனை நாட்டுப் பிரிவினை என ஜே.ஆர். சட்டமேற்படுத்தி, தீர்மானத்தை நிறைவேற்றியவர்களுக்குப் பாடம் படிப்பித்து விட்டேன், அவர்கள் நாடாளுமன்றம் வருவதானால் அந்தச் சட்டத்தை மதித்து, அதன் அனுசரணையாகத்தான் சத்தியப் பிரமாணம் எடுக்க வேண்டும் என்று பீற்றினார். அந்தச் சட்டம் இருக்கவும்தான் தனி நாட்டுக்கான விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு எழுந்தது. அந்தச் சட்டம் ஆக்கப்பட்டதன் பின்னர்தான், நாட்டில் உள்ள தனது சக மக்களின் உணர்வுகளைப் புரிந்து, நாட்டையே அகல பாதாளத்துக்கு தள்ளிய இனவாதத்தை முதலில் கையில் எடுத்து, அதனை தீர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணங்கள் நாட்டின் எல்லாப் பகுதியிலுமே இருக்கும்போதும், இராணுவத்தின் முனைப்பிலும், கட்சியின் உந்துதலிலும் போரின் வெற்றியை கொண்டாட, இப்பொழுது வலியின் தாக்கங்களில் வெளியேறிய மக்கள் புலம்பெயர்ந்தவர்களாக, அந்த வலிகளின் உணர்வில், கனடாவில் நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்க, சர்வதேசங்களின் பார்வைகளை மதிக்காது, தங்களது கொள்கை நிலைப்பாட்டுக்கு எதிரான இனத்துவேஷம் பிடித்தவர்கள் எனச் சட்டங்கள் இயற்றி, அவற்றை அடக்க முற்பட்டால், பாதைகள் எங்கே போகும்?

சுரைக்காய் விதைகளிலிருந்து பூசணிக்காயை எதிர்

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

பார்க்க முடியாது. நிலத்திலும் சரி, நிஜத்திலும் சரி. நாம் விதைத்தவற்றைத்தான் அறுவடை செய்யலாம். விரும்புவதைப் பெற முடியாது.

வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது – தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியது – நாம் எங்கே, யாருடன் நிற்கிறோம் என்பதல்ல. எந்தத் திசையில் செல்ல போகிறோம் என்பதுதான். தங்களது தேடல்களில் தெளிவுத்தன்மைகள் இல்லாவிட்டால், யாவையும் குழப்பமாகவே முடியும்.

வடக்கில் வர்த்தமானி ஊடாக கையகப்படுத்தப்படவிருந்த 6,000 ஏக்கர் வரையான காணிகள் பற்றி பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் தமிழ் மக்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய சந்திப்பில், பிரதமர், காணிகளை அரசுடமையாக்கும் நோக்கம் ஆளும் தரப்புக்கு இல்லை, அது, அரச காணிகளை வேறுபடுத்தும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டது எனவும், அரசு எல்லா இனத்தவரதும் கோரிக்கைகளையும் நீதியான அடிப்படையில் அணுகும் எனவும் கூறி, அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அமைச்சரவையின் கலந்தாலோசனையோடு தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்திருக்கிறார்.

ஆனாலும் ஆளும் தரப்பினர், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கூறியவற்றை அக்கறையுடன் செவிமடுத்தனர் என்ற நம்பிக்கை வரவில்லை. மாறாக, அவர்களின் அணுகுமுறை இந்தப் பிரதிநிதிகள் இனவாத போக்கிலேயே சமர்ப்பணங்களை செய்கிறார்கள் என்ற அசிரத்தையுடனேயே விடயங்கள் உள்வாங்கப்பட்டன என்ற ஆதங்கங்களும் உண்டு. முடிவு இவற்றில் தங்கி உள்ளது.

அந்த அணுகுமுறை, அவர்களின் பார்வையில், யுத்த வெற்றியின் பின் இந்த கோரிக்கைகள், பிரச்சினைகள் யாவுமே அர்த்தமற்றவை, இது ‘ஒரு நாடு – ஒரு மக்கள் – ஓர் அதிகாரம்’ அதற்கு கீழ்வரும் நிலப்பரப்புகள் என்ற கருத்தில் அமைந்தவைதான். ஆகவே புலம்பெயரில் வாழும் தங்களது மக்களுக்கு கட்சியின் யுத்த வெற்றியையும், அரசியல் முன்னேற்றங்களையும் பறைசாற்றி நம்பிக்கை ஊட்ட, தேசிய மக்கள் சக்தி அல்ல – ஜே.வி.பி. – போர்வெற்றித் தினமான மே 18 தங்களது கட்சியின் 60 ஆவது நினைவு தினமாகவும் கனடா, ஜெர்மனி, பிரான்ஸ் என பல நாடுகளின் தலைநகரங்களில் கொண்டாடினர். அதற்கான அவர்களின் பரப்புரைகளில், தங்களை அரசியல் கட்சியாகப் பார்க்காது, தாங்கள் நாட்டில் சிங்கள – பௌத்தத்தின் விடுதலைக்கான ஒரு தொடர்ந்த வரலாறு, அந்த வரலாற்றில் தங்கள் தலைவரின் எண்ணங்களை நிலையாக்க முன்னேறுகிறோம் தொடர்கின்றன என விஜயவீராவை விழா நாயகனாக்கினார்கள். ஜனாதிபதி அநுரா தனது வாழ்த்துச் செய்திகளை சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் அனுப்புவது வழமை. ஆனால் இவற்றுக்கோ அவை சிங்களத்திலும் ஆங்கிலத்தில்தான், பண்டார்நாயக்காவின் சிம்மாசன உரை போல் அமைந்தன.

அந்தச் செய்தியில் நாங்கள் திட சிந்தனையாளர்கள், எவ்வளவோ அடக்குமுறைகளைச் சந்தித்தவர்கள், தொடர்ந்தும் கொள்கைக்காகப் போராடியவர்கள், தேவைகள் வரும்போது முடிவுகள் எடுக்கத் தயங்காதவர்கள், எங்களது எதிர்க்கட்சிகளோ, நாங்கள் எங்களின் லட்சியங்களினாலும் கொள்கைகளினாலும் அந்த உயர்ந்த லட்சியங்களை கடைப்பிடிக்க விரும்பும் மனோபாவத்தாலும் நாட்டின் பணத்தை வீழ்ச்சி அடைய விடுவோம், பெட்ரோல் வரிசை தொடங்கும் என எதிர்பார்த்தார்கள். அவை எவையும் நடைபெறவில்லை. தீர்மானங்கள் திடமாக எடுக்கப்பட்டன எனக் கூறியிருக்கிறார்.

ஆதலால்தான் கைதிகள் விடயத்திலோ, காணிகள் விடுவிப்பது பற்றியோ, அரசமைப்புச் சட்டம் பற்றியோ ஏன் காலக் கட்டுப்பாடுகள் எனக் கேள்விகள் எழுப்பினேன்.

ஆனால் திசைகாட்டி, ஒரு பக்கம் உரிமை கோரும் தமிழ் மக்கள் இனவாதம் பேசுகிறார்கள் என சட்ட நடவடிக்கைகள் மூலம் பயமுறுத்தும் போது, கனடாவுக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்க, அந்த நாட்டில் பேச்சு சுதந்திரம் அளித்து, ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். இவை இனவாதத்தை தூண்டுகின்றன என்ற எண்ணங்கள் ஏன் எழுவதில்லை?

(தொடரும்)





# உகந்தமலை சூழலில் புதிதாக முளைத்த புத்தர் சிலையும் பௌத்த மதக் கொடியும்!

## அதிர்ச்சியடைந்த இந்துக்கள் கோடீஸ்வரன் எம்.பியிடம் முறைப்பாடு

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீமுருகன் ஆலய கடற்கரைச் சூழலில் உள்ள மலையொன்றில் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டு உள்ளது. அதனோடு ஒட்டியதாக பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது.

வருடாந்தம் முருகப் பெருமான் தீர்த்தமாடுகின்ற கடற்கரைச் சூழலில் கடற்படை முகாமுக்கு அருகே உள்ள மலையில் இந்த புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது.அதன் மேலாக பௌத்த கொடியும் பறக்க விடப்பட்டுள்ளது.

உகந்தமலையில் நாங்கள் முருகன் சிலையொன்றை நிறுவ முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில், அதே சூழலில் இப் புத்தர் சிலை எவ்வாறு நிறுவப்பட்டது என்று மக்கள் கோருகின்றனர். கதிர்காமம் போல் உகந்தையையும் மாற்ற திட்டமிட்ட சதி நடக்கிறதா என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.


இந்த விடயம் தொடர்பாக இந்துக்கள் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரனின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

பிரபல சட்டத்தரணி நடராஜா சிவரஞ்சித்திடமும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

உகந்தமலையில் வள்ளியம்மன் மலையில் கடந்த காலத்தில் முருகன் சிலை அமைப்பதற்கு முன்னாள் கிழக்கு ஆளுநர் அமைச்சர்கள் முதல் ஆலய நிர்வாகத்தினர் முயற்சி செய்தபோது அதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தடை செய்ததாக சொல்லப்படுகிறது.

இந்தநிலையில், அதேசூழலில்உள்ள மற்றுமொரு மலையில் புத்தர் சிலை வைக்கப்பட்டிருப்பது குறித்து இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இனமதபேதம் பாராட்டாதது என்று கூறிக் கொள்ளும் இன்றைய அரசாங்கத்தின் கவனத்திற்கு இதனை கொண்டு வருகிறோம். உரிய நீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்துக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தமிழரசும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விரைவாகத் திருத்திக் கொள்ள வேண்டியவை!



புருஜோத்தமன் தங்கமயில்

பொதுத் தேர்தலில் கண்ட தோல்வியிலிருந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கணிசமான அளவு மீண்டெழுந்திருக்கின்றன. தமிழரசுக் கட்சி பெரும் பாய்ச்சலோடு வெற்றியும் பெற்றிருக்கின்றது. ஆனாலும், வடக்குக் கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு அடுத்த நிலையில் இன்னமும் தேசிய மக்கள் சக்திதான் இருக்கின்றது என்ற உண்மையை தமிழ்த் தேசிய அரசியல் களம், தன்னுடைய புத்திக்குள் எடுத்துக் கொண்டு செயற்பட வேண்டியிருக்கின்றது. ஆனால், அதனை உணர்ந்து கொண்டு விடயங்களை அணுகுவதற்குப் பதிலாக தமிழரசுக் கட்சியும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விட்டகுறை தொட்டகுறையாக இன்னும் சில விரும்பத்தகாத விடயங்களுக்குள் சிக்கிக் கொண்



டிருக்கின்றன. குறிப்பாக, தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரனுக்கும் சிறீதரனுக்கும் இடையிலான முரண்பாடுகளும், அதன் நீட்சியும் எரிச்சலூட்டும் அளவுக்கு அவர்களின் ஆதரவாளர்களினாலும் சில வெளித்தரப்புக்களினாலும் ஊதிப் பெருப்பிக்கப்படுகின்றன. முன்னணியைப் பொறுத்தளவில், அதன் அரசியல் எல்லை என்பது யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரம் சுருங்கிவிட்ட நிலையில், அதனை எதிர்கொள்வது சார்ந்த நடைமுறைச் சிக்கல்களுக்குள் மாட்டிக் கொண்டு தள்ளாடுகின்றது.

**நீளும் தமிழரசுக் கட்சியின் சிக்கல்**

தமிழரசுக் கட்சியின் தலைவர் மற்றும் மத்திய குழுத் தெரிவுகளை அடுத்து எழுந்த சிக்கல்கள் நீதிமன்றங்களில் ஒன்றரை ஆண்டுகள் கடந்தும் நீடிக்கின்றன. இப்போதைக்கு வழக்குகளை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கம் சுமந்திரன், சிறீதரன் உள்ளிட்ட அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் யாருக்கும் இருப்பது மாதிரித் தெரியவில்லை. வெளிப்படையாக நோக்கினால், இந்த நீதிமன்ற வழக்குகள் அடுத்த மாகாண சபைத் தேர்தல், பொதுத் தேர்தல்கள் முடிந்தாலும் முடிவுக்கு வருமா என்பது சந்தேகமே. அப்படியான கட்டத்தில், நீதிமன்ற வழக்குகளை சம்பந்தப்பட்டவர்கள் எப்படி எதிர்கொள்ள வேண்டும், என்ன தீர்வைப்பெற வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்ளட்டும். ஆனால், கட்சியை ஒருசில தனிநபர்களுக்கான இழுபறியில் பாடையில் ஏற்றிவிட்ட முடியாது என்ற எண்ணம், தமிழ் மக்களுக்கு இருக்கின்றது. அந்தக் காரணமும் கூடவே, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழரசைக் காப்பாற்றி கரை சேர்ப்பதற்கு காரணமாகும். கடந்த பொதுத் தேர்தலில், எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை வென்று, தமிழரசுக் கட்சி முதன்மைத் தமிழ்க் கட்சியாக அடையாளம் பெற்றிருந்தாலும், யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் அந்தக் கட்சி சந்திந்த பின்னடைவு என்பது படுமோசமானது. அது, அந்தக் கட்சி இறுதியாக ஐந்து, ஆறு ஆண்டுகள் மிகமோசமான முறையில், உட்கட்சி பிளவுகள் மற்றும் தனிநபர் மோதல்களுக்குள் சிக்கிக் கொண்டதினாலும் நிகழ்ந்தது.

தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து சம்பந்தன், 2014ஆம் ஆண்டு விலகி மாவையிடம் கையளித்த போது, தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிக உறுதியான கட்டத்தில் நின்றது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல், வடக்கு மாகாண சபைத் தேர்தல்களில் மெச்சக்கூடிய வெற்றி பெற்றிருந்தது. அடுத்து வரப்போகும் காலம், ராஜபக்ஷக்களைத் தோற்கடிப்பதற்கான காலம் என்பதை உணர்ந்து சம்பந்தன், கூட்டமைப்பின் தலைவராக இருந்துகொண்டு தமிழரசுக் கட்சியின் தலைமைக்குத் தன்னுடைய விரல் அசைவுக்கு ஆடும் மாவையைக் கொண்டு வந்தார். 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல்களில் கூட்டமைப்பின் வெற்றி வடக்குக் கிழக்கில் மிகப்பெரிய அளவில் பதிவானது. மைத்திரியை ஜனாதிபதியாக்கியதில் சம்பந்தனின் பங்கு கணிசமானது. அதற்கு, அவரின் நிலைப்பாடுகளை உள்வாங்கி தமிழ் மக்கள் ஜனநாயக இடைவெளியொன்றுக்காக வாக்களித்தருந்தார்கள். பொதுத் தேர்தலில் விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சிக்கு எதிராக நின்று விமர்சனங்களை முன்வைத்த போதும், அவரை புறந்தள்ளி கூட்டமைப்பை வெற்றிபெற வைத்தார்கள். அதுதான், தமிழரசுக் கட்சி உள்ளிட்ட கூட்டமைப்பு இறுதியாகக் கண்ட பெரிய வெற்றியாகும். அதன்பின்னராக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டமைப்பு கணிசமான வாக்குச் சரிவைச் சந்தித்தது. அதன் பின்னரான காலத்தில், சம்பந்தனும் உடலளவில் தளர்ந்துவிட்டார். மாவையோ, முடிவுகள் எடுக்கத் திராணியற்ற எடுப்பார் கைப்பிள்ளை நிலைக்குள் கட்சியைக் கொண்டு சேர்ந்தார். தமிழரசுக் கட்சியின் பின்னடைவு சம்பந்தனின் தளர்வோடு ஆரம்பித்தது, கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியினர் வேறு கட்சிக்காரர்களோடு போட்டி போடவில்லை. மாறாக, தங்களுக்குள் ஒருவருக்கு ஒருவர் எதிரியாக நின்று மோதினார்கள். அதனால்தான், அவர்கள் பின்னடைவுகளையும் சந்தித்தார்கள். எப்போதுமே, தாங்கள்தான் முதன்மைக் கட்சி, ஏகநிலையில் இருப்பவர்கள்

தொடர்ச்சி▼



# தமிழரசும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விரைவாகத் திருத்திக் கொள்ள வேண்டியவை!



தொடர்ச்சி▲

என்கிற இறுமாப்பு தமிழரசுக் கட்சியினருக்கு உண்டு. அதற்கு கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் முகத்தில் அறைந்து பாடம் புகட்டியது. அதிலிருந்து கற்றுக் கொண்டு கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்கொண்டார்கள். அதனை மதித்து மக்கள் வெற்றி பெறவும் வைத்தார்கள். ஆனால், அந்த வெற்றியை கட்சிக்குள் இருக்கும் சுமந்திரன், சிறீதரன் உள்ளிட்டவர்கள் தங்களின் தனித்த வெற்றியாக தலைக்குள் எடுத்துக் கொண்டுவிட்டார்களோ என்கிற சந்தேகம் ஏற்படுகின்றது. அதனால்தான், தேர்தல் காலத்தில் அமைதியாக இருந்தவர்கள், அதன் பின்னரான நாள்களில் சில சேட்டைகளை விட்டுக் கொண்டிருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

கட்சியின் புதிய தலைவர், மத்திய குழுத் தெரிவுக்கு எதிராக வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன. அதனை மாத்திரம் பார்த்துக் கொண்டிருந்தால், கட்சியை தேசிய மக்கள் சக்தியிடம் பலிகொடுக்க வேண்டியிருக்கும். அந்த உண்மையை உணர்ந்து கொண்டு விடயங்களை கையாள்வதற்கு சுமந்திரனும் சிறீதரனும் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில், இவர்களின் இந்தப் பிணக்கினை வைத்துக் கொண்டு தமிழரசை காவுகொடுக்கக் காத்திருக்கும் தரப்புகள் காய்களை நகர்த்துகின்றன. அதிலும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் வெற்றி என்பது மீண்டும் அந்தக் கட்சியை அழுத்தமான தரப்பாக தமிழ்த் தேசியத் தரப்புக்குள் வைத்துக் கொண்டுவிடும் என்கிற ஏமாற்றம் அந்தத் தரப்புக்களிடம் உண்டு. தமிழரசுக் கட்சியின் பொதுத் தேர்தல் பின்னடைவு என்பது, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற விடயத்தை எடுத்துக் கொண்டு வந்த தரப்பினராலும் நிகழ்ந்தது. அந்தத் தரப்பினர், தமிழரசுக் கட்சிக்குள்ளேயே வேட்பாளரை தேடினார்கள், அதன்மூலம் கட்சிக்குள் ஒரு பிரிவினரை தங்களின் பின்னால் இழுத்துச் சென்று அலைக் கழித்தார்கள். அந்த அலைக்கழிப்பின் எரிச்சல் அடங்குவதற்கு முன்னர், பொதுத் தேர்தல் வந்துவிட்டது. அதன் விளைவுகளை தமிழரசுக் கட்சிதான் அதிகம் சந்தித்தது. ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், அப்படியான சம்பவங்கள் நிகழவில்லை. அதனால், தமிழரசுக் கட்சிக்குள் மூத்த தலைவர்களிடம் ஓரளவுக்கு மோதல் தவிர்ப்பு நிலை காணப்பட்டது. ஆனால், தேர்தல் முடிந்ததும், அந்த மோதல் தவிர்ப்பு நிலையைப் புறந்தள்ளி வைத்து வாய்ச்சவடால் விளையாட்டுக்களில் ஈடுபட்டு ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக நினைக்கிறார்கள்.

'சுமந்திரனை தமிழரசின் பொதுச் செயலாளராக நான் ஏற்கவில்லை' என்று சிறீதரன் கூறும் ஒரு தொலைக்காட்சி பேட்டியின் முன்னோட்டம் வெளியானதும், தமிழரசுக் கட்சிக்குள் சற்று தீப்பற்றிக் கொண்டது. ஆனால், அந்தத் தீக்கு எண்ணை ஊற்றும் வேலைகளை வெளியில் இருக்கும் தரப்புக்கள் சில செய்தன. எப்படியாவது, சுமந்திரன் சிறீதரன் பிரச்சினையை மீண்டும் கிளறிவிட்டு காயத்தை பெரிதாக்கிவிட வேண்டும் என்கிற நிலையில், அந்தத் தரப்புக்கள் ஓநாய்கள் மாதிரி காத்திருந்தார்கள். அவர்களுக்கு, அந்த பேட்டி முன்னோட்டம் வாய்த்தது. ஆனால், அவர்களின் முகத்தில் ஓங்கி அறைந்து விடயங்களை, தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரான சிவஞானம் புறந்தள்ளிவிட்டார். யார் ஏற்றுக் கொண்டாலும் இல்லையென்றாலும் கட்சியின் யாப்பின் பிரகாரம், சுமந்திரனே தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர், அதனை தேர்தல் திணைக்களமும் ஏற்றிருக்கின்றது என்று ஊடக சந்திப்பை நடத்தி விடயங்களை முடித்துவைத்துவிட்டார். அத்தோடு, கட்சிக்குள் காணப்படும் முரண்பாடுகளை தன்னால் கையாள முடியும், அது தொடர்பில் ஊடகங்களும் வெளித்தரப்புக்களும் கவலை கொள்ளத் தேவையில்லை என்ற உடல்மொழியை அவர் வெளிப்படுத்தினார். தமிழரசுக் கட்சியின் தலைமையில் நான் இருக்கிறேன், ஆகவே விடயங்களை கையாளும் ஆளுமை தன்னிடம் உண்டு, சுமந்திரனையும் சிறீதரனையும் தன்னால் கையாள முடியும் என்று அவர் ஊடக சந்திப்பில் வெளிப்படுத்தினார். அவர் பதில் தலைவராக இருந்தாலும் விடயங்களை கையாளுவதற்கான ஆர்வமும் மற்றவர்களின் முரண்பாடுகளைக் கடந்து கட்சியாக ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பு தன்னிடம் இருப்பதாக அவர் நினைக்கிறார். அதனை அவர் நிரூபிக்கவும் முயல்கிறார். தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் குழப்பங்களை கையாள்வதற்கு சிவஞானம் பொருத்தமானவராகவே ஆரம்ப கட்டங்களில் புலப்படுகிறார். ஏனெனில், அந்தக் கட்சியின் பல சிக்கல்களுக்கு மாவையின் செயற்பாடற்ற தலைமைத்துவம் காரணமாக இருந்திருக்கின்றன.

தமிழரசுக் கட்சியினர் முதலில் ஒற்றைப் புரிதலோடு இருந்து கொள்ள வேண்டும். உட்கட்சி பிரச்சினைகளை நீங்கள் எப்போது வேண்டுமானாலும் தீர்த்துக் கொள்ளுங்கள். ஆனால், அந்தப் பிரச்சினைகளை



மக்களிடம் பெரிய விடயமாக கொண்டு வராதீர்கள். ஏனெனில், மக்களுக்கு நாளாந்த வாழ்க்கைச் சிக்கல்களே ஆயிரமுண்டு. அப்படியான கட்டத்தில், இந்த உட்கட்சி சிக்கல்களைக் காணும் போது எரிச்சலே

தொடர்ச்சி▼

# தமிழரசும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் விரைவாகத் திருத்திக் கொள்ள வேண்டியவை!

தொடர்ச்சி▲

மிஞ்சும். அதுதான், தேசிய மக்கள் சக்தியினரையும், ஊசி சுயேச்சையையும் கொண்டு வந்து சேர்க்கக் காரணமாகும். இப்போது, கிடைத்துள்ள வெற்றியை ஆக்கபூர்வமான விடயங்களில் நின்று அரசியல் உத்தியாக கையாள வேண்டும். அடுத்து மாகாண சபைத் தேர்தல் வரப்போகின்றது. அதனை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தேசியத் தரப்புக்களின் ஒருங்கிணைவு அவசியம். தமிழ்த் தேசிய அரசியலின் பிரதான எதிரி தென் இலங்கை ஆட்சியாளர்கள் என்கிற விடயத்தை எந்தவொரு தருணத்திலும், மறந்துநின்று உங்களுக்குள் மோதி மக்களை நடுவீதியில் விட்டுவிடாதீர்கள்.

### முன்னணியின் மனத் தடை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்கிற அடையாளம் இருந்தாலும் கஜேந்திரகுமாரும் அவரது கட்சியினரும் இன்னமும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்கிற அளவைத் தாண்டி வரவில்லை. அதுதான், அந்தக் கட்சியின் சிறிய பலமும் பெரும் பலவீனமும். தமிழரசுக் கட்சியின் எழுச்சியும் காங்கிரஸின் வீழ்ச்சியும் தந்தை செல்வா என்கிற ஒற்றை மனிதரினால் நிகழ்ந்தது. அன்று முதல், காங்கிரஸின் அரசியல் எதிரி என்பது அதிக தருணங்களில் தமிழரசுக் கட்சியாகவே இருந்திருக்கின்றது. அதுதான், அந்தக் கட்சியின் பெரும் மனச் சிக்கலுக்கு காரணமாகும். தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் வந்தாலும், காங்கிரஸ் உடனடியாக வெளியேறி விட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் விடுதலைப் புலிகள் இல்லையென்றால், காங்கிரஸ் உள்வந்திருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவு. புலிகள் அரங்கில் இருந்து அகன்று சில மாதங்களுக்குள்ளேயே காங்கிரஸ் கூட்டமைப்புக்கள் இருந்து வெளியேறிவிட்டது. அன்றிலிருந்து காங்கிரஸ் தன்னை முன்னணியாக அடையாளப்படுத்திக் கொண்டாலும், அவர்கள் தங்களின் அரசியல் எதிரிகளாக கூட்டமைப்பை குறிப்பாக தமிழரசுக் கட்சியையே முன்னிறுத்தினார்கள். தென் இலங்கையில் ராஜபக்ஷக்கள் ஆட்சியில் இருந்த காலத்திலும் இல்லாத காலத்திலும் முன்னணியின் பிரதான அரசியல் எதிரி தமிழரசுக் கட்சிதான். அதுதான், 2020 பொதுத் தேர்தலில் அவர்களுக்கு இரண்டு நாடாளுமன்ற ஆசனங்களை பெறுவதற்கு காரணமாகவும் இருந்தது. ஆனால், அதன்பின்னரான தேர்தல்களில் அந்தக் கட்சி பாரிய பின்னடைவையே சந்தித்தது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முன்னணி கணிசமான முன்னேற்றம் கண்டுவிட்டதாக கூறினாலும், அது தமிழ்த் தேசியப் பேரவையாக பல தரப்பினரை தன்னுள் அரவணைத்துக் கொண்டதால் நிகழ்ந்தது. குறிப்பாக, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி நகர சபைகளில் கிடைத்த வெற்றிகளில் சிவாஜிலிங்கம், அருந்தவபாலன் ஆகியோரின் பங்கு கணிசமானது.

கடந்த பொதுத் தேர்தல் தோல்விகளுக்குப் பின்னரான படிப்பினைகளை அடுத்து, தேசிய மக்கள் சக்தி என்கிற தென் இலங்கையின் கட்சியை எதிர்ப்பதுதான் ஒரே நிலைப்பாடு என்ற நிலைக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் வந்தன. தங்களுக்குள் எழுதப்படாத மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கும் வந்தன. யாரும் யாரையும் விமர்சிப்பதில்லை. தேசிய மக்கள் சக்தியை தோற்கடிக்க வேண்டும் என்பதே ஒற்றைக் குறிக்கோளாக இருந்தது. ஆனால், அந்தத் தருணத்திலும் கூட கஜேந்திரகுமார், தமிழரசுக் கட்சியை தோற்கடிப்பதற்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பயன்படுத்த வேண்டும் என்று பேசினார். ஆனால், அது தமிழ்த் தேசிய பரப்பில் ரசிக்கப்படவில்லை என்ற நிலையில், அவர் தன்னுடைய தமிழரசுக்கு எதிரான சுருதியை இறக்கிக் கொண்டுவிட்டார். ஆனால், அவரின் அடுத்த நிலையில் இருக்கும் சுகாஷ் போன்றவர்கள், கடந்த கால பிரசார வாந்திகளையே எடுத்துக் கொண்டார்கள். தமிழரசுக் கட்சியினரை, 'குரங்குகள்' என்று



விளித்துப் பேசினார். அத்தோடு, முன்னணியின் கூட்டுக்குள் புதிதாக சேர்ந்துகொண்ட சரவணபவன், சிவாஜிலிங்கம் உள்ளிட்டவர்களும் தமிழரசுக் கட்சியினரை திட்டித்தீர்த்தார்கள். அதுவும், தேர்தலின் பின்னராக, 'தமிழரசுக் கட்சியினர் சாராயமும் காசும் கொடுத்து வென்றார்கள்' என்று மேடைகளில் பேசியமை எல்லாமும் அபத்தங்களின் உச்சம். வடக்குக் கிழக்கில் தங்களின் பின்னடைவைச் சகித்துக் கொள்ள முடியாத தேசிய மக்கள் சக்தியினர், தமிழரசுக் கட்சியை நோக்கி கசிப்பும் காசும் கொடுத்து வென்று விட்டார்கள் என்று வசைபாடியிருந்தனர். அந்த வசையை, முன்னணியும் எடுத்துக் கொண்டது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஏனெனில், அது தமிழ் மக்களை சாராயத்துக்கும் பணத்துக்கும் சோரம் போனவர்கள் என்று சித்திரிப்பதாகும். இந்த விடயங்களை கஜேந்திரகுமார் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். இல்லையென்றால், அவரின் கட்சியின் வீழ்ச்சிக்கு யாரும் தடைபோட முடியாது.

முன்னணியின் சிக்கல்களில் பிரதானமானது, அது யாழ்ப்பாணத்துக்குள் சுருங்கிவிட்டமையாகும். அந்தக் கட்சி தன்னுடைய வாக்குகளை யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரமே பெற முடியும். அதிலும், தமிழ்த் தேசிய வாக்குகளை மாத்திரம் இலக்கு வைக்க முடியும். அதனால், தமிழ்த் தேசிய வாக்குகளை முதன்மையாகப்பெறும் தமிழரசுக் கட்சியை விமர்சித்தால்தான், முன்னணிக்கான வாக்குகள் வந்து சேரும் என்கிற விடயம் புரிந்து கொள்ளக் கூடியதுதான். முன்னணியின் வாக்கு வங்கி என்பதில், ஐம்பது வீதமானது காங்கிரஸின் பாரம்பரிய வாக்குகள், அந்த வாக்குகளுக்கும் எதிர்காலம் என்பது பெரிதாக இல்லை. அதனால், தமிழரசுக் கட்சி மீதான அதிருப்தியாளர்களை உருவாக்கி அவர்களை தங்களின் வாக்குகளாக மாற்ற வேண்டிய தேவை முன்னணிக்கு உண்டு. இவ்வாறான சிக்கல், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு (சங்கு) இல்லை. ஏனெனில், அந்தக் கட்சிக்கு தமிழரசுக் கட்சிக்கு அடுத்து வடக்குக் கிழக்குப் பூராவும் ஓரளவு வாக்கு வங்கியுண்டு. அதனால், அவர்கள் யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரம் சுருங்கி நின்று அரசியல் பேச வேண்டியதும் இல்லை. முன்னணியின் அரசியல் யாழ்ப்பாணத்துக்குள் இருந்து ஆனையிறவு எல்லைதாண்டி அடுத்த பிரதேசங்களுக்கும் செல்ல வேண்டும். இல்லையென்றால், சுகாஷ் மாதிரியான வாய்க்கொழுப்புப் பேச்சுக்களுக்குள் சிக்கி முன்னணி காணாமல் போய்விடும்.

# அதிக விலைக்குத் தண்ணீர்ப் போத்தல் விற்ற ஐவருக்கு மொத்தம் 21 லட்சம் ரூபா அபராதம்

## நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றம் நடவடிக்கை



கொத்மலை, தவலந்தென்னாவைப் பகுதியில் அதிக விலைக்கு தண்ணீரொ போத்தல் ஒன்றை விற்ற விற்பனையாளருக்கு ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கடைகளில் போத்தல் தண்ணீர் அதிக விலைக்கு விற்ற வியாபாரிகள் மீது திடீர் சோதனை நடத்தி, சட்டத்தின் முன் நிறுத்த நுகர்வோர் விவகார அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, ஒரு வர்த்தக நிறுவனத்திற்கு எதிராக நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், அதிக விலைக்கு தண்ணீர்ப் போத்தல் விற்ற குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் அந்த நிறுவனத்துக்கு கடந்த 22 ஆம் திகதியன்று ஐந்து லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதே சமயம் அதிக விலைக்கு தண்ணீர்ப் போத்தல் விற்பனை செய்தமைக்காக வேறு நான்கு வியாபாரிகளுக்கு தலா 4 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அரசாங்கம் போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீருக்குக் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்த போதிலும், போத்தலில் அடைக்கப்பட்ட தண்ணீர் அதிக விலைக்கு விற்கப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில், நுவரெலியா மாவட்டத்தில் உள்ள கடைகளை ஆய்வு செய்யும் திட்டத்தின் கீழ் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில், நுகர்வோர் சட்டங்களை மீறியமைக்காக ஒன்பது பேருக்கு எதிராக நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. குற்றத்தை ஒப்புக் கொண்ட எட்டு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் ஒன்பது லட்சத்து நாற்பதாயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.



# போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பினருக்கு வழங்கப்படவிருந்த ரூ.1கோடி 80 லட்சம் சிக்கியது

## மாரவில, தொடுவாவை பொலிஸார் நடவடிக்கை



(உடப்பு க.மகாதேவன்)

டுபாயில் இருந்து இயக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பு தொடர்பான பல தகவல்களுடன், 180 லட்சம் ரூபா மதிப்பிலான பணத்தை தொடுவாவை பொலிஸார் கண்டு பிடித்துள்ளனர்.

கடல் வழியாக போதைப்பொருள் தொகையை கொண்டு வந்த குழுவுக்கு இந்த பணம் வழங்கப்படவிருந்ததாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக 8 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாரவில, தொடுவாவை பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு மஹவெவ, சிவிராஜ மாவத்தையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, சந்தேகத்திற்கிடமான ஓட்டோ ஒன்றைச் சோதனை செய்தனர்.

அப்போது ஓட்டோவில் இருந்த கறுப்பு நிற பயணப் பையை பரிசோதித்தபோது, அதில் பெருந்தொகையான பணம் இருப்பதை அதிகாரிகள் கண்டு பிடித்தனர்.

உடனடியாக செயல்பட்ட பொலிஸ் அதிகாரிகள், ஓட்டோவில் இருந்த இருவரையும் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர்.

சந்தேக நபர்களிடம் விசாரணை செய்தபோது, கடந்த 19ஆம் திகதி பேருவளை அருகே கடலில், சுமார் 300 கிலோகிராம் போதைப்பொருள் தொகை பலநாள் மீன்பிடி படகு மூலம் இலங்கைக்கு கொண்டு வந்தமை தெரியவந்துள்ளது.

அந்த படகில் இருந்த கப்டன் உட்பட 6 பேருக்கு தலா 30 லட்சம் ரூபா வீதம் வழங்குவதற்காக இந்தப் பணம் கொண்டு செல்லப்பட்டதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் போதைப்பொருளை கொண்டு வருவதற்கு முன்னர், கடத்தல்காரர்கள் பலநாள் மீன்பிடி படகிற்கு 70 லட்சம் ரூபா வழங்கியிருந்தனர்.

ஓட்டோவில் பணத்தைக் கொண்டு வந்த நபரும் பலநாள் மீன்பிடி படகு ஒன்றின் உரிமையாளராவார். முன்னதாக, 100 கிலோகிராம் போதைப்பொருளுடன் இந்திய பாதுகாப்பு பிரிவினரால் அந்த படகு கைப்பற்றப்பட்டிருந்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் மேற்பார்வையின் கீழ், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஏ.பி. பிரியந்தவின் வழிகாட்டலின் பேரில், பலநாள் மீன்பிடி படகின் கப்டன் மற்றும் இரு பெண்கள் உட்பட மேலும் 6 சந்தேக நபர்களை, சந்தேகத்திற்கிடமான ஓட்டோவுக்கு பாதுகாப்பு வழங்கிய மோட்டார் சைக்கிளுடன் பொலிஸார் மடக்கினர்.

டுபாயில் இருந்து இயக்கப்படும் இந்த போதைப்பொருள் கடத்தல் வலையமைப்புடன் தொடர்புடைய இலங்கையை சேர்ந்த நபர்கள், சிலாபம், தொடுவாவை, நீர்க்கொழும், மாத்தறை ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் எனவும் இதுவரை தெரியவந்துள்ளது






# அரசை நெருக்கடிக்குள் தள்ளியுள்ள முள்ளிவாய்கால் நினைவேந்தல்!



கி.வசந்தரூபன்

இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் இருந்து விடுதலை பெறுவதற்கு முன்னதாகவே தமிழ் தேசிய இனம் தமது உரிமைக்காக போராடியது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் தென்னிலங்கை அரசாங்கம் தமிழ் தேசிய இனத்திற்கு எதிராக முன்னெடுத்த பேரினவாதக் கொள்கை தமிழ் தேசிய இனப் போராட்டத்தை தீவிரப்படுத்தியது. அகிம்சை வழியில் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக போராட்டங்களை தென்னிலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் கண்டு கொள்ளாததன் விளைவாக இளைஞர், யுவதிகள் தற்காப்பு யுத்தம் என்ற பெயரில் உரிமைக்காக ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை உருவாகியிருந்தது. அந்த ஆயுதப் போராட்டத்தை பயங்கரவாத யுத்தமாக காண்பித்து சர்வதேச நாடுகளின் துணையுடன் மஹிந்த அரசாங்கம் 2009 மே 18 மௌனிக்கச் செய்திருந்தது.

21 ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற பாரிய மனித பேரவலமாக முள்ளிவாய்கால் மண் மாறியது. போர் விதி மீறல்கள், மனித உரிமை மீறல்கள் என ஒட்டுமொத்த உலகமும் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு அந்த போரின் போது இடம்பெற்ற சம்பவங்கள் பதிவாகின. ஒட்டுமொத்த தமிழ் மக்களினது மனங்களிலும், மனித உரிமையை மதிப்பவர்கள் மத்தியிலும் அந்தக் கணங்களை ஜீரணிக்க முடியாது. பலர் குடும்பம் குடும்பமாகவும், குடும்பங்களின் உறவுகளும், பிள்ளைகள், அண்ணன், அக்கா, தம்பி, தங்கை, அப்பா, அம்மா என பலர் தமது உறவுகளை இழந்ததும் முள்ளிவாய்காலில்தான். இன்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் 3,000 நாள்களைத் தாண்டி போராட்டத்தை நடத்துவதற்கும் அந்த மண்தான் காரணம். இன்று அந்த வேதனைகளை கடந்து 16 ஆண்டுகள் முன்னோக்கிச் சென்றுவிட்டோம்.

தொடர்ச்சி▼





# அரசை நெருக்கடிக்குள் தள்ளியுள்ள முள்ளிவாய்கால் நினைவேந்தல்!

தொடர்ச்சி▲

ஆனாலும், அந்த நாளை தமிழ் மக்கள் மறக்க வில்லை என்பதை மே 18 முள்ளிவாய்கால் நினை வேந்தல் நிகழ்வுகள் புடம்போட்டு காட்டியிருக் கின்றன. அந்த நாள் ஒரு சரித்திரமாக பதிவாகி யிருக்கின்றது. வடக்கு – கிழக்கு தமிழர் தாயகப் பிர தேசத்திலும், புலம்பெயர் தேசங்களிலும், கொழும் பிலும் முள்ளியவாய்கால் நினைவேந்தல் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. முள்ளியவாய்கால் கிழக்கு பகுதியில் பிரதான நினைவுத் திடலில் அஞ்சலி நிகழ்வுகள் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றன. கடந்த காலத்தை விட இம்முறை அஞ்சலி நிகழ்வில் கலந்த கொண்டோர் தொகை அதிகமாகவே இருந்தது. அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னதா கவே அங்கு வந்த மக்கள் தாம் இறுதி யுத்தில் பதுங்கி யிருந்த இடங்களையும், தமது உறவுகளை இழந்த இடங்களையும் தேடி அங்கு கண்ணீர் விட்டு கதறி அழுது தமது துயரத்தை வெளிப்படுத்தத் தொடங்கி விட்டனர். இதனால் அந்தப் பகுதி ஒரு சோகம் நிறைந்த புனிதமான பகுதியாகவே காட்சியளித்தது. மிகவும் உணர்வு பூர்வமாக மக்களால் அந்த நாள் அனுஷ்டிக்கப்பட்டு குருதியால் தோய்ந்த அந்த மண் கண்ணீர் மழையால் நனைந்தது. தமிழ் மக்களின் உரிமைக்காக காவு கொடுக்கப்பட்ட அதிகபட்ச இழப்பே இது. தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை நடந்தேறியது என்பதுக்கு சாட்சியம் முள்ளிவாய்கால் பேரவலமே.

இதேபோன்று, பிரித்தானியா, ஜேர்மனி, கனடா, சுவிஸ், அவுஸ்ரேலியா, பிரான்ஸ், டென்மார்க், பெல்ஜியம் மற்றும் இந்தியா போன்ற புலம்பெயர் தமிழ் மக்கள் வாழும் தேசங்களிலும் இந்த நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடைபெற்றன. அத்துடன் நடை பெற்ற மனிதப் பேரவலத்துக்கு நீதி கோரிய துவிச் சக்கர வண்டிப் பயணமும் இடம்பெற்றது. பிரித்தானி யாவில் அஞ்சலி நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றமையுடன் பிரித்தானிய பிரதமரிடம் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டி மகஜரும் கைய ளிக்கப்பட்டது. கனடாவில் பிரம்டன் மாநிலத்தில் முள்ளிவாய்கால் நினைவுத் தூபியும் இனப்படு கொலை நினைவாலயம் என்ற வகையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அது தற்போது இராஜதந்திர வட்டாரங்களில் பேசு பொருளாகவும் மாறியுள்ளது. போர் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த நிலைமையில் புலம்பெயர் தேசங்களில் இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான் என்பது அங்கீகாரம் பெற்று வருகின்றமை இலங்கை அரசாங்கத்திற்கு நெருக் கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஆக, ஒட்டுமொத்த தமிழ் மக்களாலும் ஓர் இனப்படு கொலைக்கான குறியீட்டு நாளாக மே 18 அனுஷ் டிக்கப்பட்டு வருகின்றது. இந்த நாள் தமிழ் மக்களின் உரிமைக்காக மடிந்தவர்களின் புனித நாள். தமிழ் மக்களின் வரலாற்றில் அழிக்கப்பட முடியாத ஒரு துயர நாள். இந்த நாளை தூய்மையாகவும், புனித மாகவும், அரசியல் கலப்பின்றியுன் தமிழ் தேசிய இனம் தொடர்ந்தும் அனுஷ்டிக்க வேண்டும். அதுவே






# காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு தமிழரசின் கீழ் வரும் உள்ளூராட்சி மன்றங்கள் தயார்!

## டோக்கியோ மாநாட்டில் சாணக்கியன் உறுதி தெரிவிப்பு

“நமது நாட்டில் காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை உலக நாடுகளின் ஆதரவோடு முன்னெடுக்க வடக்கு கிழக்கில் ஆட்சி அமைக்கும் தமிழரசின் உள்ளூராட்சி மன்றங்கள் தயார்.“‘‘

– ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான ரெய்சினா மாநாட்டில் இலங்கை சார்பாக விசேட அழைப்பின் பேரில் கலந்து கொண்டே இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி. அங்கு பிரதான உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இவ் மாநாடானது, காலநிலை மாற்றம், பசுமை நிதி மற்றும் சுற்றுச்சூழல் நீதி போன்ற முக்கியமான பிரச்சினைகளில் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் ஒரு முக்கியமான மேடையாகக் காணப்படுகின்றது.

இந்த நிகழ்வை அப்சர்வர் ஆராய்ச்சி அறக்கட்டளை (ழுசுகு), ழுசுகு அமெரிக்கா, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கி (JBIC) மற்றும் கெய்சாய் டோயுகாய் (ஜப்பான் வர்த்தக நிர்வாகிகள் சங்கம்) இணைந்து நடத்தின.

அங்கு இலங்கை தொடர்பாக இராசமாணிக்கம் சாணக்கியன் எம்.பி. விசேட உரையாற்றினார்.

அவர் கூறியவை வருமாறு:–

இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கில் காலநிலை மாற்றம் தொடர்பிலும் அதற்குரிய நடவடிக்கைகள் தொடர்பிலும் இலங்கை மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைத்த தமிழரசுக் கட்சியின் சபைகள் மூலமாக இவற்றுக்கான நடவடிக்கைகளை உலக நாடுகளின் ஒத்துழைப்போடு நாம் முன்னெடுக்க தயாராக உள்ளோம்.

காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அநீதிகள், கரையோரப் பாதுகாப்பு, மகாவலி, வனப் பாதுகாப்பு, காணிப் பிரச்சினைகள் – குறிப்பாக குடிதண்ணீர்ப் பிரச்சினைகள் இவற்றுள் அடங்கும்.

இலங்கையில், வானிலையைச் சரிபார்ப்பதில் நாங்கள் நிபுணர்களாகி விட்டோம் என்பது உங்களுக்குத் தெரியும், ஏனென்றால் அது எங்கள் அனுபவம். ஆவணங்களை விட வேகமாக அவை மாற்றமடைகின்றன. ஒரு நாள் வெள்ளத்திற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மறுநாள் எல்லாம் வறண்டு போகும் அளவில் உள்ளது. அதற்கும் தயாராக உளோம்.

தெற்காசியாவில் காலநிலையால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நாடுகளில் இலங்கை ஒன்றாகும். ஆனாலும் இங்கு இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி பற்றாக் குறையாக உள்ளது. இருப்பினும், உலக வங்கி மற்றும் பிறவற்றிலிருந்து எங்களுக்கு சில உதவிகள் கிடைத்துள்ளன. ஆனால் ஒட்டுமொத்தமாக எமது நாட்டிற்கான காலநிலை மாற்றத்திற்கான நிதி மிகவும் குறைவடைந்து விட்டது.

வறட்சியின் போது விவசாயிகளுக்கான குறுகிய கால நிவாரணத் திட்டங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம். ஆனால் நிதி முடிந்ததும், உதவியும்

முடிந்துவிடுகிறது. நீடிக்கக்கூடிய உள்கட்டமைப்போ அல்லது அமைப்புகளோ பெரிதாக இல்லை. இலங்கையில் நெடுந்தீவு மாதிரியான இடங்களில் மழைநீர் சேகரிப்பு உதவிகரமாக இருந்தாலும், இன்றும் நாட்டின் பல பகுதி

தொடர்ச்சி▼






# காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு தமிழரசின் கீழ் வரும் உள்ளூராட்சி மன்றங்கள் தயார்!

## டோக்கியோ மாநாட்டில் சாணக்கியன் உறுதி தெரிவிப்பு

தொடர்ச்சி▲

களில் பாதிப்புக்குள்ளான குடும்பங்கள் தண்ணீர் பவுசர்களையே நம்பிக் கொண்டு இருக்கின்றன. பெண்கள் இன்னும் மைல்கள் நடந்து சென்று தண்ணீர் எடுக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. இது 2025 ஆம் ஆண்டு – ஆனாலும் அடிப்படை வசதிக்கே பாரிய போராட்டமாக உள்ளது. இது வெறும் காலநிலை பிரச்சினை அல்ல - இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை ஆகும்.

நமது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான விவசாயம், காலநிலை மாற்றங்களால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருகிறது. தொடர்ச்சியான வறட்சி காரணமாக குறைந்த மகசூல், தாமதமான அறுவடைகள் மற்றும் நிலையற்ற உணவு விநியோகம் காணப்படுகின்றது. காலநிலை எதிர்ப்புத் திறன் கொண்ட பயிர்கள் – வெப்பம், வெள்ளம் மற்றும் மோசமான மண்ணைத் தாங்கும் பயிர்கள் – உள்ளன. ஆனால் அவை மிகவும் குறைவாகவே எமது விவசைகளுக்கு கிடைக்கின்றன. இவை தொடர்பான விவசாய ஆராய்ச்சி ஆய்வகங்களிலிருந்து விவசாயிகளின் கைகளில் அவற்றைப் பெறுவதற்கு தகுந்த முதலீடு, விழிப்புணர்வு மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் தேவை.

இவை எமது நாட்டில் முக்கிய பிரச்சினைகளைக் கொண்டுவருகின்றன. காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது தொடர்பாக இலங்கை உரியா தொழில்நுட்பத்தை பாவிப்பது மிகவும் குறைவாக உள்ளது. குறிப்பாக விவசாயத்தில். நமது பொருளாதார நெருக்கடியால் இவற்றை நடைமுறைப்படுத்த முடியில்லை. ஆனால் இப்போது புத்திசாலித்தனமாக மீண்டும் எமது நாட்டை கட்டியெழுப்ப ஒரு வாய்ப்பு உள்ளது.

நமக்கு கலப்பு நிதி, பொது–தனியார் கூட்டாண்மை மற்றும் நீண்டகால உத்திகள் தேவை. 12 மாதங்களுக்குப் பிறகு மறைந்துவிடும் நன்கொடையாக அளிக்கப்பட்ட நிதி உதவிகள் அல்ல. பரவலாக்கப்பட்ட உள்கட்டமைப்பில் முதலீடு செய்வோம், தன்னாட்சியுள்ள உள்கட்டமைப்புகளில் முதலீடு செய்யலாம், தண்ணீர் அணுகலை மேம்படுத்தலாம் மற்றும் நிலைத்தன்மை ஒரு தேசிய முன்னுரிமையாக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும்.

காலநிலை மாற்றங்களுக்கான குறுகிய உதவிகளை வழங்குவதை விட நீடிக்கும் அமைப்புகளை உருவாக்குவோம். நிதி, தொழில்நுட்பம் மற்றும் துறைகள் மற்றும் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட ஒத்துழைப்பு குறித்து தீவிரமாகக் கலந்துரையாடுவோம். நீண்டகால செயல் திட்டங்களை உருவாக்குவோம். எமது நாட்டின் நடவடிக்கைக்கான எனது அழைப்பு இதுதான்.

மேலும், மழைக்காலங்களில் மாம்பழங்களை வளர்த்து, வறட்சியின் போது ஐந்து நிமிடங்களில் நம் துணிகளை உலர்த்த முடிந்தால், நிச்சயமாக இதையும் நம்மால் நிவர்த்தி செய்ய முடியும். – என்றார்.






# அறிவுமிக்க சமூகத்தினரை உருவாக்க அணிதிரள்வோம்

## புதிய அலை கலை வட்ட மகளிர் அணி தலைவி அறைகூவல்

நேர்கண்டவர்:- ராகவி

"அறிவுமிக்க சமூகத்தை உருவாக்க வேண்டியது ஆற்றல் மிக்க சிந்தனை கொண்ட ஒவ்வொருவரதும் கடமையாகும். இதனைக் கருத்தில் கொண்டு எனது சமூகப் பணிகளை ஆற்றி வருகின்றேன். இதற்கு எனக்கு உறுதுணையாக நிற்பது நான் சார்ந்திருக்கும் புதிய அலை கலை வட்டமே."

– இவ்வாறு புதிய அலை கலை வட்டத்தின் உப தலைவியும் அதன் மகளிர் அணியின் தலைவியுமாகிய ரஞ்சனி சுரேஷ் தெரிவித்தார்.

கலைமுரசின் கலைஞர் சந்திப்புக்காக நேர்கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

**கேள்வி:- முதலில் உங்களைப் பற்றி...?**

பதில்:- நான் களுத்துறை மாவட்டம், ஹொரணை பிரதேசத்தில் உள்ள றைகம் தோட்டத்தின் கீழ் பிரிவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவள். எனது பெற்றோர் பி.எம். செல்வரட்ணம் நளாயினி தம்பதியர் ஆவார். இரண்டு தம்பிகள், இரண்டு தங்கைகள் உள்ளனர். கணவர் எம்.சுரேஷ்குமார். இவர் வாகன விபத்தில் இறந்து விட்டார். எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். சோகங்களைத் தாங்கிக் கொண்டு சமூக மேன்மைகளைக் கருத்தில்கொண்டு என் பணிகளைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றேன்.

**கேள்வி:- உங்களது பணிகளின் ஆரம்பங்கள் பற்றி...?**

பதில்:- நான் சமூக சேவைக்குள் உள்வந்த வருடம் 1993. எனது சமூக சேவை அறநெறி மூலமே ஆரம்பமானது. சிறு வயது முதல் இன்று வரைக்கும் எனது பணி சிறப்பாக நடைபெறுகின்றது. எனது அறநெறி ஆரம்பம் றைகம் கீழ் பிரிவு விக்னேஷ்வரா அறநெறி பாடசாலையாகும். இங்கு எனது பணி 12 வயது முதல் 22 வருட காலங்கள் தொடர்ந்தன. பின்னர் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பல வானேஷ்வரர் அறநெறி பாடசாலையில் தற்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

**கேள்வி:- இவை ஊடாகத் தாங்கள் மேற்கொண்ட பணிகள்...?**

பதில்:- சமயத்தைப் போதிப்பதோடு மட்டுமின்றி இதனைப் பயில வரும் கஷ்டமான வாழ்க்கைத் தரத்தை கொண்ட பிள்ளைகளுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றோம்.



**கேள்வி:- உங்களது கலை., இலக்கியம் மற்றும் சமூகம் சார்ந்த பிரவேசம் பற்றி....?**

பதில்:- இவ்வாண்டு ஆரம்பத்தில் புதிய அலை கலை வட்டம் தனது மகளிர் அணியை மீளுருவாக்கம் செய்தது. இதில் என்னை இணைத்துக் கொள்ளுமாறு அதன் நிறுவனர் ராதாமேத்தா கோரிக்கை விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்டு அதில் இணைந்தேன். அதில் தலைவியாக அவர் என்னை நியமித்தார். எந்தவிதமான அனுபவமும் இல்லாத என்னை அவர் தலைவியாக நியமித்தது ஆச்சரியம் அளித்தது. உம்மால் முடியும் என அவர் உற்சாகம் அளித்து எம்மை வழி நடத்திய விதம் எமக்குப் பெரும் நம்பிக்கை அளித்தது. இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாகப் பொங்கல் விழாவை ஏற்பாடு செய்தோம். இதில் கோலப்போட்டி, ஆடல் போட்டி என்பவற்றை நடத்தியதோடு இதற்கான பரிசுகளை வழங்கினோம். இதனைத் தொடர்ந்து அமைப்பின் ஸ்தாபக தினமான ஜனவரி 30 ஆம் திகதி "கலாமித்ரா" என்ற பிரமாண்டமான விருது விழாவை நடத்தினோம். கலாமித்ரா விழாவில் பத்து பெண் ஊடகவியளாளர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தோம்.

அதனைத் தொடர்ந்து, மார்ச் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தின விழாவைக் கொண்டாடினோம். இதில் ஆளுமை நிறைந்த ஐந்து பெண்களுக்கு "வீரவணிதையர்" என்ற தலைப்பில் விருது வழங்கிக் கௌரவித்ததோடு பெண் தலைமைத்துவம் கொண்ட 10 பேருக்கு நிவாரண உணவுப் பொதிகள் கொடுத்ததோடு பெண் துப்புரவுப் பணியாளர்கள் 10 பேருக்குச் சேலையுடன் பரிசில்கள் வழங்கி மகிழ்வித்தோம். தொடர்ந்து சித்திரைப் புத்தாண்டு நிகழ்வை மிகச் சிறப்பாகச் செய்தோம். உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினோம். குறிப்பாக எமது நிறுவனரின் விடாத முயற்சியின் காரணமாக பட்டிமன்ற நிகழ்வு ஒன்றைப் பலரும் பாராட்டும் வகையில் செய்து முடித்தோம். இதன் அடிச்சுவட்டில் எமது அமைப்பின் இளைஞர் அணியும் மீள் உருவாக்கம் பெற்றுள்ளது.

**கேள்வி:- அப்படியாயின் உங்களது இந்தப் பணிகளின் இலக்கு...?**

பதில்:- நிச்சயமாக சமூக மேம்பாட்டு சார்ந்து கலை, இலக்கியம் மற்றும் ஊடகத்துறை சார்ந்த இளையவர்களின் வளர்ச்சிக்குக் களம் அமைக்கக் கூடியது. குறிப்பாக தலைநகரில் தமிழ் பேசும் பெண்களின் தனித்துவத்தை எடுத்தியம்பும் சேவைகளைச் செய்யும் அமைப்பு என்பதை உறுதி செய்வதாகும்.

**கேள்வி:- தற்போது பிரதம அமைப்பின் உப தலைவியாகி இருக்கிறீர்களே....**

பதில்:- ஆம் அமைப்பின் அனைத்து பிரிவுகளைச் சேர்ந்தவர்களையும் உள்வாங்கி இதனை எமது நிறுவுநர் அமைத்துள்ளார். அவரது நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்ல நம்மவர் என்றும் தயாராகவே உள்ளனர்.

**கேள்வி:-உங்களதுதொழில் துறை குறித்து....?**

பதில்:- நான் எனது சொந்த முயற்சியில் தற்போது கல்யாண அழைப்பிதழ், விழாக்கள் தொடர்பான அழைப்பிதழ்கள் மற்றும் அச்சிடுதல் போன்ற வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றேன்.

**கேள்வி:- இந்தப் பணிகள் காரணமாக நீங்கள் பெற்றுக்கொண்ட கௌரவங்கள்...?**

பதில்:- எனது தந்தையாரின் அடிச்சுவட்டில் வந்தது சமூக சேவை செய்யும் மனப்பாங்கு. இதன் காரணமாக இங்கிரியாவில் உள்ள கணபதி அறநெறிப் பாடசாலையால் சிறந்த சமூக சேவையாளர் என்று விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். புதிய வானம் அமைப்பு பெருமையுடன் சிறந்த சமூக சேவையாளர் என்ற விருதை எனக்கு வழங்கியது.

முதலாவது எனது தந்தைக்கும், இரண்டாவது என் ஆசான் ராதா மேத்தாவுக்கும் மற்றும் எம்மை ஊக்குவிக்கும் அனைத்து உள்ளங்களுக்கும் நன்றி!

# பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தார் முதல்வர் ஸ்டாலின்

## தமிழகம் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள்





தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடியை நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து அவர் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் பிரதமர் மோடி தலைமையில் நேற்று நிதி ஆயோக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பின்னர், பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த முதல்வர் ஸ்டாலின், தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தினார். பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த முதல்வர் ஸ்டாலின் கருத்து தெரிவிக்கையில்,

“நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழகத்துக்கு என்னென்ன செய்ய வேண்டும், என்ன நிலுவை உள்ளது என்பதை பட்டியலிட்டு பேசியுள்ளேன்.

குறிப்பாக, பள்ளிக் கல்வித்துறையில் தமிழகத்துக்கு விடுவிக்க வேண்டிய எஸ்.எஸ்.ஏ. நிதி, கோவை, மதுரைக்கான மெட்ரோ திட்டங்கள், அங்குள்ள விமான நிலையங்களை விரிவாக்கம் செய்தல், சென்னையில் பறக்கும் ரயில் திட்டத்தை மெட்ரோ ரயிலிடம் ஒப்படைக்கவேண்டும்என்றுகோரிக்கைவைத்துள்ளேன்.

மேலும், செங்கல்பட்டு – திண்டிவனம் தேசிய நெடுஞ்சாலையை 8 வழிச்சாலையாக்க வேண்டும். கோவையில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடியினர் சாதிப்பெயர் விடுதிகளை மாற்றுவது, கிறிஸ்தவராக மாறிய ஆதிதிராவிடர்களை பட்டியலினப் பிரிவில் சேர்ப்பது, இலங்கை கடற்படையால் சிறை பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் மற்றும் படகுகளை மீட்பது போன்ற கோரிக்கைகளையும் வைத்துள்ளேன்.

நிதி ஆயோக் கூட்டம் முடிந்ததும், பிரதமரை சந்திக்க நேரம் கேட்கப்பட்டிருந்தது. அங்கேயே அவர் 5 நிமிடம் நேரம் அளித்தார். அப்போதும் இதே கோரிக்கைகளை வலியுறுத்தினேன்.” என்றார்.

அப்போது செய்தியாளர்கள் உங்கள் கோரிக்கைகளுக்கு பிரதமர் என்ன பதில் கூறினார்? என்று கேட்டனர். அதற்கு பதிலளித்த முதல்வர், “அவர் செய்யமாட்டேன் என்றா கூறுவார். செய்வேன் என்றுதான் தெரிவித்தார். போகப் போக பார்ப்போம்.” என்றார்.

தொடர்ச்சியாக நீங்கள் கோரிக்கை வைத்தாலும், சட்டப்போராட்டம் நடத்தியே பெற வேண்டியுள்ளது, தற்போது நம்பிக்கை உள்ளதா என்ற கேள்விக்கு, “ஏற்கெனவே மெட்ரோ ரயில் திட்டத்துக்கு சேர வேண்டிய நிதியை நிறுத்தி வைத்திருந்தனர். அப்போது நான் நேரில் சென்று வலியுறுத்தியதும் செய்து கொடுத்தார். அதை நினைவுபடுத்தி நன்றி கூறிய போது ‘நீங்கள் வந்து சொன்னதால் செய்தேன்’ என்றார். அதேபோல் இப்போது சொல்லியதையும் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளேன்.” என்று கூறினார்.

தமிழகம் கோரிய கல்வி நிதி கிடைக்குமா என்ற கேள்விக்கு முதல்வர் ஸ்டாலின், “நம்பிக்கையுடன் இருப்போம்.” என்று பதிலளித்தார்.

அமுலாக்கத் துறை மீதான உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் கருத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள் என்ற கேள்விக்கு, “நீதிபதி நியாயமான தீர்ப்பைதான் தான் கூறியுள்ளார்.” என்றார்.

பல மாநிலங்களைத் தொடர்ந்து, தமிழகத்திலும் அமலாக்கத் துறையால் குற்றச்சாட்டுக்கள் வைக்கப்படுகிறதே என்ற கேள்விக்கு, “இது அரசியல் ரீதியாக நடைபெறுவது. அதை எப்படி சந்திக்க வேண்டுமோ அப்படி சந்திப்போம்.” என்றார்.

# மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட்டால் எந்த இலக்கும் சாத்தியமற்றது அல்ல; பிரதமர் மோடி



மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து டீம் இந்தியாவைப் போல செயல்பட்டால், எந்த இலக்கும் சாத்தியமற்றது அல்ல என்று நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுடில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் நிதி ஆயோக்கின் 10 ஆவது நிர்வாகக் குழு கூட்டத்திற்கு பிரதமர் மோடி தலைமை தாங்கினார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அவர்,

“நாம் வளர்ச்சியின் வேகத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. மத்திய அரசும், அனைத்து மாநிலங்களும் ஒன்றிணைந்து டீம் இந்தியாவைப் போல செயல்பட்டால், எந்த இலக்கும் சாத்தியமற்றது அல்ல.

ஒவ்வொரு இந்தியனின் இலக்கும் வளர்ச்சியடைந்த பாரதம்தான். ஒவ்வொரு மாநிலமும் வளர்ச்சியடையும் போது, பாரதம் வளர்ச்சியடைந்தது ஆகும். இதுவே அதன் 140 கோடி மக்களின் விருப்பமாகும்.” என்று கூறினார்.





# காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கொடூரமான கட்டத்தை எட்டியுள்ளது

## அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவிப்பு

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கொடூரமான கட்டத்தை எட்டியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இஸ்ரேல் முற்றுகையிட்டுள்ள காஸாவின் வடபகுதிக்கு மனிதாபிமான உதவிகள் எதுவும் இதுவரையில் சென்றடையவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, காஸா மீது இஸ்ரேல் நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் 76 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரையில் 53,822 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் 122,382 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் காஸாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.





# உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா ஆளில்லா விமானத் தாக்குதல்

## 15 பேர் காயம்

உக்ரைனின் தலைநகர் கீவ் மீது ரஷ்யா நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் சுமார் 15 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கீவ் மீது ரஷ்யா 250 ஆளில்லா விமானங்கள் மற்றும் 14 ஏவுகணைகளை ஏவியதாகவும் அவற்றில், 6 ஏவுகணைகள் மற்றும் 245 ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும் உக்ரைன் விமானப்படை தெரிவித்துள்ளது.

துருக்கியில் இரு நாடுகளின் அதிகாரிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்குப் பின்னர் கைதிகள் பரிமாற்றத்திற்கு ரஷ்யாவும் உக்ரைனும் ஒப்புக் கொண்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# ஜெர்மனியில் ரயில் நிலையத்தில் கத்திக்குத்து; 12 பேர் காயம்



ஜெர்மனியில் ஹம்பர்க் ரயில் நிலையத்தில் இடம்பெற்ற கத்திக்குத்து தாக்குதல் அந்த நாட்டு மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜெர்மனியில் ஹம்பர்க் ரயில் நிலையத்தில் ரயிலுக்காக காத்துக் கொண்டு இருந்தவர்கள் மீது திடீரென மர்ம நபர் ஒருவர் கத்தியால் தாக்கியுள்ளார்.

இந்த தாக்குதலில் 12 பேர் காயம் அடைந்துள்ளனர். இவர்களில் மூன்று பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கத்தியால் தாக்கிய நபரை அங்கிருந்த பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்துள்ளதுடன், கத்தி குத்து தாக்குதல் நடத்தியவரின் நோக்கம் குறித்தும் அவரது பின்னணி குறித்தும் விசாரணை நடத்தி வருவதாகவும் அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.05.2025




இன்று ஆக்க பூர்வமான நாளாக அமையும். நீங்கள் புத்துணர்ச்சியுடனும் உறுதியுடனும் காணப்படுவீர்கள். புதிய முயற்சிகள் இன்று உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.நீங்கள் உற்சாகத்துடன் சிறப்பாக பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்புணர்வுடன் நடந்து கொள்வீர்கள். இருவரும் உறவின் மதிப்பை உணர்ந்து ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்துவீர்கள்.

இன்று உங்களின் பணத் தேவைகள் பூர்த்தியாகலாம். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

இன்று ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாளின் போக்கைக் கண்டு நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். உங்கள் கனவுகளும் விருப்பங்களும் நிறைவேறும். தொலை தூரத்திலிருந்து நல்ல செய்தி கிடைக்கப்பெறுவீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றுவீர்கள். தொழில் சம்பந்தமான பயணம் மேற்கொள்வீர்கள்.

உங்கள் வாழ்க்கைத் துணையிடம் நீங்கள் மிகவும் அன்பாக நடந்து கொள்ள முயற்சிப்பீர்கள். உங்கள் உறவு சிறப்பாகும். இருவரும் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் இருப்பீர்கள்.

உங்களிடம் அதிக அளவில் பணம் காணப்படும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள். அது உங்களுக்கு மன நிறைவைத் தரும்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் தேவை. வேகத்தை தவிர்க்க வேண்டும். சிறப்பாக திட்டமிட்டால் நல்ல பலன்களைப் பெறலாம்.

அமைதியாகவும் எதிலும் தலையிடாமல் இருப்பதன் மூலம் உணர்ச்சி வசப்படாமல் இருக்க உதவும். பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். என்றாலும் உங்கள் திறமை மூலம் சமாளிக்கலாம். உங்களை நீங்கள் உற்சாகப் படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் தேவைகளை புரிந்துகொண்டு நடந்து கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையை ஏமாற்றாமல் இருக்க முயலுங்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. தேவையற்ற செலவுகள் ஏற்படலாம். நிதி நிலையை கண்காணிப்பதன் மூலம் ஸ்திர நிலையைக் காணலாம்.




நீங்கள் இன்று செய்யும் எந்தச் செயலிலும் நம்பிக்கையும் உறுதியும் தேவை. இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இல்லாத போதிலும் உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் மனதில் எதிர்மறை எண்ணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று அதிகப்படியான பணிகளை சந்திக்க நேரலாம். பணிகளை ஒழுங்குபடுத்தி முன்னுரிமைப்படி செய்தால் குறித்த நேரத்தில் முடிக்க இயலும். இதனால் பணியில் மனநிறைவைப் பெறலாம்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையில் இடைவெளி அனுமதிக்காதீர்கள். இன்று நீங்கள் எளிதில் உணர்ச்சிவசப்படலாம். இந்தப் போக்கை தவிர்ப்பது நல்லது. உங்கள் துணையுடன் நட்போடு நடந்து கொள்ளுங்கள்.




உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் அனுபவத்திலிருந்து பாடம் கற்றுக் கொள்ளுங்கள். இதனால் வெற்றி பெற்ற மனிதராக ஆவீர்கள்.

இன்றைய வெற்றியின் ரகசியம் சிறந்த திட்டமிடல் ஆகும். அட்டவணையிட்டு பணி செய்தால் பணிகளை சுமூகமாக செய்ய இயலும்.

உங்கள் துணையிடம் பொறுமையாக நடந்து கொள்ளுங்கள். உங்கள் உறவை நல்லுறவாக்க இது மிகவும் அவசியம்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியமாய் இருக்க உடற்பயிற்சியும் தியானமும் அவசியம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது.




முன்கூட்டிய திட்டமிடலும் கவனமும் இன்று மிகவும் அவசியம்.பிரார்த்தனை இன்று நல்ல பலன் தரும்.

இன்று சிறந்த பலன்களைக் காண்பதற்கு திட்டமிட வேண்டியது அவசியம். உங்கள் முயற்சியில் நேர்மை தேவை.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அனுசரித்து நடந்து கொள்ளவேண்டும். அன்பை ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதன் மூலம் உறவு சுமூகமாக இருக்கும்.

இன்று உங்கள் குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் மகிழ்ச்சியின்மை காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக காணப்படும்.

இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும்.




உங்கள் தைரியம் மற்றும் உறுதி காரணமாய் வெற்றி கிடைக்கும். நீங்கள் செய்யும் செயல்களை நம்பிக்கையுடன் செய்யுங்கள். அமைதியாய் இருக்க இசை கேளுங்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை கையாள்வது எப்படி என்று தெரிந்து கொள்ளுங்கள். இது உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அமர்ந்து பேசுங்கள். இருவரும் கலந்து பேசுவதன் மூலம் உறவின் தேவையைப் புரிந்து கொள்ள முடியும்.

பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். நிதிநிலையை கண்காணிப்பதன் மூலம் பண இழப்பை தடுக்கலாம்.




இன்றைய நாள் முழுஅளவிலான அனுகூலத்தை அளிக்காது. பலன்கள் தாமதமாக கிடைக்கும். உங்கள் அர்ப்பணிப்பும் நீங்கள் கையாளும் முறையும் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

பணிகளை திட்டமிட்டு அதன்படி செயல்படுத்தினால் கடைசி நிமிட அல்லல்களைத் தவிர்க்கலாம். அதனால் பதற்றமின்றிக் காணப்படலாம்.

நீங்கள் உங்கள் கணவன் – மனைவிக்கு உற்ற துணையாக இருங்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உற்சாகப்படுத்துங்கள். இதனால் உறவு வலுப்படும்.

சாதாரணமாக செய்யும் செலவை விட இன்று அதிகமாக செலவு செய்வீர்கள். என்றாலும் பணத்தை பயனுள்ள நோக்கத்துக்காகச் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.05.2025




இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். கடினமான பணிகளைக் கூட எளிதாக குறித்த நேரத்துக்கு முன் முடிப்பீர்கள்.

பணியில் புதிய மைல் கல்லை அடைவீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் பணியை நீங்கள் கையாளும் விதத்தையும் உங்கள் வேகம் மற்றும் துல்லியத்தையும் உங்கள் மேலதிகாரிகள் பாராட்டு வார்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். சந்திப்புகளும் இணைந்து செயல் படுவதும் மகிழ்ச்சியை அதிகரிக்கும்.

இன்றுஉங்கள்தேவைகளைபூர்த்திசெய்யும்அளவுக்கு பணப்புழக்கம் காணப்படும். உங்கள் சேமிக்கும் திறன் அதிகரிக்கும்.




இன்று அமைதியாகவும் பொறுமை யாகவும் இருக்க வேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். தேவையற்ற ஏமாற்ற உணர்வுகளை தவிர்த்திடுங்கள்.

பணியில் உங்களின் நிஜமான திற மையை காண்பிப்பீர்கள். பணிகளை கவனமாகக் கையாண்டால் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள் ளுங்கள். நச்சரிக்கும் வகையில் எதையும் கூறாதீர்கள். அவருடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

செலவுகள் அதிகமாக காணப்படும். என்றாலும் இன்று பணத்தை திறமையாக கையாண்டால் இன்றைய நாள் சுமூகமாக இருக்கும்.

இன்று பதற்றமுடன் காணப்படுவீர்கள். இதனால் தலைவலி ஏற்படலாம்.




நீண்ட கால திட்டங்ககளை அமைப் பது அவசியம். இன்று வாழ்வின் சௌகரி யங்களுக்கு பணம் சம்பாதிப்பீர்கள். இன்றைய சம்பவங்கள் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

உங்கள்பணியில்மகிழ்ச்சியும்திருப்தி யும் காணப்படும். உங்கள் பணியில் உற்சாகத்தைக் காண்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று நீங்கள் இருவரும் மகிழ்ச்சியுடன் இருப் பீர்கள். திரைப்படம் காண அல்லது பொழுதுபோக்க என வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

வீட்டில் சுப நிகழ்சிகளுக்காக பணம் செலவு செய் வதில் மகிழ்ச்சி காண்பீர்கள். பணத்தை உரிய முறை யில் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று கவனமாகவும் சாமார்த்திய மாகவும் செயல்களை செய்ய வேண்டும். சிறு கவனச் சிதறல் காரணமாகக் கூட தவறுகள் நேரலாம்.

உங்கள் பணிகள் மேலதிகாரி களின் பாராட்டைப் பெறும் அளவிற்கு இருக்காது. மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய் தால் விரைவில் பாராட்டைப் பெற இயலும். உங்கள் பணி களின் தரத்தை எதிர்மறை எண்ணங்கள் பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று முக்கியமான விஷயங்களைப் பற்றி உங்கள் துணையிடம் பேசாதீர்கள். சாதாரணமாகப் பேசுங்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண இது மிகவும் அவசியம்.

அதிகரிக்கும் செலவுகளைக் கண்டு கவலை கொள்ளா தீர்கள். பணம் பயனுள்ள வகையில் செலவாகும்.

# திருக்கேதீஸ்வர திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை உபயகாரருக்குக் காளாஞ்சி!

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார், திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச் சீலை உபயகாரர்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று (24) சனிக் கிழமை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயகத்தில் இடம்பெற்ற பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று காலை விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ் வர ஆலயத்துக்குப் பாரம்பரிய முறைப் படி கொடிச்சீலை வழங்கும் செங்குந்த மரபுடையவர்களுக்கான காளாஞ்சி எடுத்துச் செல்லப்பட்டு திருநெல்வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முக நாதன் கபிலன் குடும்பத்தினரிடம் கைய ளிக்கப்பட்டு பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆலய திருப்பணிச் சபையைச் சேர்ந்த உறுப்பினர்கள் பங்குபற்றியிருந்தனர்.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் 30 ஆம் திகதி பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



